சேமமா தேசியன்

மலர் 2 இதழ் 7 அக் 1929

JL
Y5926.VM24,
N29.2-7
220498

உ

சிவமயம்

# வேளாள மித்திரன்.

உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

மலர் 2 } சுக்கில-௵ ஐப்பசி. 1929-௵ அக்டோபர். { இதழ் 7.

## வேளாளர் சிறப்பு.

ஆட்சி தரு நீதியும் கொற்றவர்கள் புஜபலமும்
அதிவீர சூரர் வலியும்
ஆயிரவர் வாணிபம் இயற்றுதலும் உலகெலாம்
அன்ன தாதாவென்பதுவும்;

காட்சி யொன்று இல்லாத அந்தணர் மகத்வமும்
தங்கு சுப கல்யாணமும்
சந்ததம் ஜபதபம் பூசைநேமங்கள் இவை
தப்பாமலே புரிவது;

மோட்ச நிலை தரும் அருள் குருவின் உபதேசமும்
முனிவர் இருடியர் சீலமும்
மூவுலகமும் புகழ் வாழ்வுபெறுதலுமிவைகள்
முற்றுமேழியர் பெருமை காண்.

காட்சி தரு கர்த்தனே! சூட்சகா ரணியனே!
கற்பக விராச மேவும்
கங்கை புனை ஈசனே! மங்கைமகிழ் நேசனே!
கயிலையங் கிரிவாசனே!

கயிலாச நாதர் சதகம்.

## யதீந்திர வீரன்.

இந்தியாவில் இன்று நிகழும் சம்பவங்களைப் பார்க்குமிடத்து, பண்டைய பாரதயுத்தம் புதியதோர் முறையில் மீண்டும் நடப்பதாகவே தோன்றுகிறது. 'ஒன்றிலார் படைகளெல்லாம் ஒரு பகற் பொழுதில் கொல்வேன்' என நின்ற அரவான், கண்ணபிரானை நோக்கி "வாழ்விக்க நின்றாய்! கடியநேர் பலி தந்தாலும் காய் அயர் சில நாள் கண்டுமுடிய நேரலர் வெம்போரின் முடிவு எனக்கருளுக" என வேண்டியபின்னர், களபலிக்குசந்தோஷமாகத் தலை சாய்த்து நின்றது போல, தாமிறப்பினும் தம் தாய் நாடு சிறந்தோங்க வேண்டுமெனச்சிறை புகுந்து தூக்கு மேடையில் நின்றும் உயிர் நீத்த இளைஞர் பலர், பலர். பகைவரும் ஆச்சரியப்படுமாறு சக்கர வியூகத்தைப் பிளந்து, அவரைக்கலக்கி, தன் தேர்வில் ஒரு தோள் முதலி வெல்லாம் இழந்து, தலை அறுப்புண்டு வீழ்ந்த போதும் கதாயுதத்தால் அரசருடலம் நொறுக்க அடித்த அபிமன்யன், வீரன். அதுபோல இன்று அரசாங்கத்தாரும் இரக்கம் கொள்ள, தன்னுயிர் நீத்தவர் யதீந்திரதாஸர். இவ்வங்க இளைஞர் சிங்கம் தன் 25 வயதிலுள் நாட்டிற்காக செய்த தியாகங்கள் பல பல. இச்சிறுவயதிலுள் எத்தனை முறை சிறை! எத்தகைய கடின தண்டனை! இவற்றையெல்லாம் பொருட் படுத்தினாரோ? கடந்த கல்கத்தா காங்கிரஸின் போதும் தொண்டர் படைத்தலைவனாய் நின்று புரிந்த ஊழியம் கண்முன் நிற்கிறதே, 28 ௵ செப்டம்பர் மாதம்தான் சிறையிலிருந்துவிடுதலையடைந்தார். மீண்டும் இவ்வருடம் சதிவழக்குசம்பந்தமாககைதியாகி 3 மாதங்களுக்கு முன்னர் லாகூருக்கு அழைத்துச்செல்லப்பட்டார். சிறையில்

220498



நடந்த கொடுமைகளைச் சீர்படுத்த உண்ணாவிரதமேற் கொண்டார்! எத்தகைய விரதம்?. தண்ணீரு முண்ணா விரதம்! ஒரு நாளா இரண்டு நாட்களா; 63 நாட்கள்! நினைக்கவும் கொடுமை கொடுமை! இதனால் நாடோறும் ஒவ்வொரு அவயவங்கள் ஓய ஓய, இறுக, இறுக, தரைத் தரை, மறக்க மறக்க, இவ்வாலிபனின் உயிர் எவ்வாறு சிறுகச் சிறுக உடலை விட்டு நீங்கியிருக்கும்! அன்பரே உன்னுங்கள் உன்னுங்கள். தன் முதுகு எலும்மையும் இந்திரனுக்கு உதவிய ததீசி முனிவரைப் போலவன்றோ இவ்வாலிபத்திலகன்-இளைஞர் ரத்தினம்-பாரதசேய் தன்னுயிரை இந்தியர் மீட்சிக்காக நல்கினான். 63 நாட்களாகசிறுகச் சிறுக, வரண்டுவரண்டு தோய்ந்த யதீந்திரனின்ரத்தக்கட்டிகளேனும் சல்லாபமாயிருக்கும் நம்இளைஞர்முகத்தில்தெரித்து, அவரைச்சுயநல உறக்கத்தினின்று எழுப்பாதோ! யதீந்திரனுக்குஇனிய கதராடையேனும் இன்றமுதல்கட்டாரோ?பாரதஅன்னை! ஓர்புத்திரரத்னத்தை இழந்தனை! வாலிப உலகமே! வீரமணியை பறி கொடுத்தனை! அஹிம்சாதர்மமே! தியாக மூர்த்தி சாம்பலாகினர். என்று தணிவதிந்தத்துயர்! துயர்!! இறைவனே! யதீந்திரனை அருகிருத்தித்தேறுதல் அளியும், அளியும்.

(ப. ர்)

## ஸ்ரீ காந்தியடிகளின் சஷ்டி பூர்த்தி வைபவம்.

"மேல் நாட்டார் ஏசுவென, வியன் துருக்கர் நபியென்ன. விளங்கும் இந்த
மா நாட்டார் கண்ணபிரான் மலர்த்தமொழிப் படி மாலின் வரவே யென்று
தானுட்ட, பவுத்தரெல்லாந் தமதிறையாம் புத்தரென சாற்று நிற்கு,
பூ நாட்டின் திருவடியான் புகழ் நாட்டு வார்பிரப்பும் புனித மாமே"

'உண்மையே பாகை'
உறுதியே கவசம், ஒழிவிலாக்
கருணையே ஆடை, திண்மையார்
ஒழுங்கே பாதுகம், சகிப்பும் தியா
கமும் யோகமாம் தண்டம், தன்மையாம்
அஹிம்சை கமண்டலத்துடனே இந்திய மக்
களின்நன்மைக்காக ஓய்வில்லாது உழைப்பவரும்,
சிறப்பாகவேளாள மக்களின் வறுமையை யொழிக்க
சுதர்சன சக்கரமாம் இராட்டினத்தை உதவியவருமான
**மகாத்துமா காந்தியடிகளின் 60 வருட நிறைவு விழா**
புரட்டாசி 15 உ மேல் வெகு சிறப்பாக உலகமெங்கும் கொ
ண்டாடப்பட்டது. ஏழைகளின்உத்தமநண்பரான இப்பெரி
யாரின் சஷ்டி பூர்த்தி வைபவத்தை வேளாள மக்கள்
சிறப்பாகக் கொண்டாடுவதுடன் இப்பெரியார் கூறிய
அறவழி நின்று, கதர் உடுத்தி, நாட்டின் நலம் நாடி
நம்மவர் உழைப்பாராக. இந்தியர் உய்யத் தோ
ன்றியகாந்தியடிகள் தீர்க்காயுள், ஆரோக்கிய
மாதிய சர்வ மங்களங்களுடன் பன்னெ
டும் வருடங்கள் சிறந்தோங்கி எல்லாம்
வல்ல இறைவன் அருள் புரிவாராக.
ஸ்ரீ காந்தியடிகள் வாழி, அவரடி
யார்களும் வாழி, வாழி.



"அருணநெடும் ஒளிக்கதிர்கள் சென்றுலவும் அவனியினும் அதற்கப்பாலும்
மருள் நெறி சேர் சுயநலமாம் மாயவிருள் இரிந்தோட மதிக்க வொண்ணு
கருணையெனும் அளிக்கதிர்கள் தமைவீசி யிலகுமருள் காந்தி யோர் தன்
வருணமலர்த் திருவடிகள் மாநிலத்தில் பல்லாண்டு மருவி வாழ்க"

குறிப்பு:— மேற்கோள் செய்யுள்கள் ஸ்ரீமதிபண்டிதை அசலாம்பிகையம்மையாரின் ஸ்ரீ காந்தி புராணத்தினின்று எடுக்கப்பட்டவை. அவ்வம்மையாருக்கு ஓம் வந்தனம்.

## சர்க்காவின் சங்கீதம்

'செண்ட் பெர்ச் மான்ஸ்' கல்லூரிப் பத்திரிகையில் தளபதி ஏ. ஆர். பொதுவல் என்னும் அறிஞர் ஓர் அழகிய கட்டுரை வரைந்திருக்கிறார். அது வருமாறு:—

பத்தாண்டுகளுக்கு முன்வேல்ஸ் மாகாணத்தில்நான் சுற்றுப்பிரயாணஞ் செய்து கொண்டிருந்த போது, அங்கே ஒவ்வொரு குடிசையிலும் கைராட்டினம் உபயோகத்திலிருந்து வருவதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். நயமாகவும் சீக்கிரமாகவும் கிடைக்கக்கூடிய மில் துணிகளை விட்டுவிட்டு, நிதானமாக நடைபெறும் இந்தநூல் நூற்றல் தொழிலில் ஏன் இறங்கவேண்டு மென்று அங்கிருந்தசிலரைக் கேட்டேன். வேல்ஸ் மாகாணத்திலும் இங்கிலாந்தின் கிராமங்கள் பலவற்றிலும் கைராட்டினத்தி லிருந்து நூல் உற்பத்திசெய்யும்

தொழில் பரம்பரையாக வந்து கொண்டிருக்கிற தென்றும், மில் துணியைவிட, கைராட்டினத்து நூலாலாய சுதேசித் துணிகெட்டியாகவும் நீண்ட நாள் தாக்குப்பிடிப்ப தாகவும் இருக்கிற தென்றும் ஒருஸ்திரீ எனக்கு விடை இறுத்தாள். தவிர, நாட்டின் பொருளாதார நிலைமை நெருக்கடி யாகாமலிருப்பதற்கு இந்தத்தொழில் உதவி செய்கிற தென்றும் அவ்வம்மையார் கூறினர். இங்கனம் பதிலிறுத்த அம்மாது உள்ளிருந்து ஓர் அலமாரியிலிருந்து, தமது கையால் உற்பத்தி செய்யப்பட்ட சிலதுணிகளை எடுத்துக் கொண்டு வந்து காட்டினர். இவை, மெல்லிய இழைகளோடு கூடியிருந்தது மன்றி மிக அழகாகவும் நெய்யப்பட்டிருந்தன. தவிர, அம்மாது கூறியதாவது :— "இப்பொழுதுஎன்முன்னர் இருக்கும்கைராட்டினம் எளிய வாழ்வுக்கும் உயரியநோக்குக்கும் சின்னமா யிலங்குகிறது. உலகமுழுவதிலும் துணிகளை உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள்நிரம்பிவிட்ட போதிலுங்கூட இந்தக்கைராட்னத்தின் இனியகீதம் கிராமங்களில் கேட்டுக் கொண்டுதானிருக்கும். ஏனென்றால் இந்தக் கைராட்டினம் குடும்பத்தோடு ஒன்றுபட்டிருக்கிறது. குடும்ப வாழ்க்கையினு லுண்டாகும் பல கவலைகளிலிருந்து நீக்கி அமைதியைக் கொடுக்கும் ஆற்றல் இந்தகைராட்டினத்திடமிருக்கிறது. தவிர இதனால் மனத்திருப்தி ஏற்படுகிறது. நாங்கள் தனிமையா யிருக்கும்போது இந்தக் கைராட்டினமே எங்களுக்குத் துணையா யிருக்கிறது."

கைராட்டினத்தைப் பற்றி இவ்வளவு உயர்வாகக் கூறிய அவ்வம்மையார், தமது இராட்டினத்தடியிலமர்ந்து, நூற்கும்போது, பஞ்சிலிருந்து நூல் வருவதைப்பார்த்து மகிழ்ச்சி யடைந்தது, தமது குழந்தைகள் விளையாடுவதைப்பார்த்துச் சந்தோஷப் படுவது போலவே இருந்தது. அவர் நூற்கும் நூலில் மனித உணர்ச்சி நிரம்பி ஓடுவதுபோ லிருந்தது. பல ஆண்டுகளாக, அந்தக்கைராட்டினம் அதே இடத்தில் வைக்கப்பட்டிருந்ததாகத்தோன்றியது. இராட்டினத்தின் அடிப்பாகம் ஓரே இடத்தி லிருந்ததால் பழமையாகித்தேய்ந்தும்போய்விட்டது. ஆனால் நூல் நூற்பதற்கு வேண்டிய உபகர



ணங்கள் யாவும் எப்பொழுதும் தயாராக வைக்கப்பட்டிருந்தன.

நான், அடிக்கடி ஓய்வுகிடைக்கும் பொழுது இயற்கைக் காட்சிகள் நிறைந்துள்ள பலஇடங்களுக்குச் சென்று சித்திரங்கள் வரைந்து கொண்டு வருவேன். அவைகளை விடச் சிறந்ததாயும் சொற்ப விலையுள்ளதாயும் இருக்கும் படங்கள் பல சித்திரக் கடைகளில் விற்றல் கூடும். ஆனால் என் கைப்படவரைந்த படத்திலேயே எனக்கு அதிக பற்றுதல் ஏற்படும். இதற்குக் காரணம் என்னவென்று என்னையே நான் அடிக்கடி கேட்டுக் கொள்வதுண்டு. தன்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஒருசாமானைக்கண்டு மனிதன்வரம்பில் இறும்பூதெய்துகிறான். இது மனிதனுக்குப்புதிதாகத் தோன்றிய உணர்ச்சி யல்ல. பிறர் வீட்டு மரங்கள், பழங்கள், வீடுகள், குழந்தைகள் எவ்வளவு அழகாயும் சிறந்தனவாயும் இருந்தபோதிலும் நாம் நட்ட மரம், நமது தோட்டத்திலே உற்பத்தியான பழங்கள், நாம் கட்டிய வீடு, நமக்குபிறந்த குழந்தைகள் இவைகளிலேயே சிறப்பைக்காண்கிறோம். இவைகளே நமது ஆன்ம உணர்ச்சியோடு சம்பந்தப் பட்டனவா யிருக்கின்றன. இவைகளின் உற்பத்தியில் நமது கை, மனம், இருதயம்யாவும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. நமக்கும், நம்மால் சிருஷ்டிக்கப்பட்ட இப்பொருள்களுக்கும் ஒருவித சம்பந்தம் ஏற்பட்டு விடுகிறது.

கைராட்டினத்தின் தத்துவமும் இதுவேயாகும். நான் ஐரோப்பாவுக்குப் புறப்படுவதற்கு ஒரு வருஷத்திற்கு முந்தி "சுய உற்பத்தியில் மகிழ்ச்சி" என்ற தத்துவம் என்மனதில் நன்றாகப் பட்டது. என் சொந்த உழைப்பினால் உண்டாகும் மகிழ்ச்சியை இந்தக் கைராட்டினத்தின் மூலமாக அநுபவிக்கலாம் என்ற எண்ணம் எனக்கு உதயமாயிற்று. அப்பொழுது, என்னையே நான்பார்த்துக் கொண்டேன். என்மேலேயும் என்னைச் சுற்றியுமுள்ள வஸ்துக்களைக் கணக்கெடுத்துப் பார்த்தேன். எல்லாம் ரூபாய், அணா, பைசாக்களோடு சம்பந்தப்பட்டனவாகவே இருந்தன. உண்மையான உணர்ச்சியென்பது, அச்சாமான்கள் எதிலும் இல்லை. எனவே, அதுமுதல்,

என்கையாலேயே உற்பத்தி செய்யப்பட்ட துணியைக்கொண்டு என் தேகத்தை மூடிக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தேன்.

அதுமுதலே நான் நூல் நூற்கத் தீர்மானித்தேன். மகாத்மா காந்தி கைராட்டினத்தைப் பற்றிப் போதிக்கத்தொடங்கிப் பலவருஷங்களாயின. முதலில் நூல் சரியானபடி வரவில்லை. அதிகபஞ்சு வீணாயிற்று. நான் நூற்ற நூலையும் வீணாகப்போன பஞ்சையும் பார்த்தால் அணுவும் அண்டமும் போலிருந்தன. ஆனால் அந்த நூலின் ஒவ்வோர் அங்குலமும்—அதற்கு வாயிருந்தால் பேசியிருக்கும். அவ்வளவு உணர்ச்சியுடன் கூடியிருந்தது. அதன் சிருஷ்டியில் என்னுடைய அம்சமும் கலந்திருந்தது. முதன்முதலாக நான் நூற்றநூலைக்கண்டு எனக்கு அதிக சந்தோஷம் உண்டாகிவிட்டது. அந்தச் சந்தோஷத்தினால், என்குழந்தைகளுக்கு அந்நூலைக்கொண்டு காட்டினேன். ஒருவன் புதிதாக ஒருசித்திரத்தை எழுதினால் அவன் எவ்வளவு சந்தோஷப்படுவானோ அவ்வளவு சந்தோஷம் எனக்குண்டாயிற்று. என் குழந்தைகளோ, எனக்கு முன்னாடியே பல நாட்களாக நன்றாக நூல்நூற்று வருகின்றனர். ஆனால் என் நூல் அப்பா நூற்ற நூலல்லவா! அதைப் பாராட்ட வேண்டியது அவசியமல்லவா ? " அப்பா எவ்வளவு மெல்லிய இழையாக நூற்றிருக்கிறார்' என்று சொல்லிக் கொண்டே அவர்கள் வெளிச்சத்தில் அதை எடுத்துக்கொண்டு போய்ப்பார்த்தார்கள். நூல் முறுக்கேறவில்லை. ஒரே சன்னமாகவும் வரவில்லை. ஒரு நெசவுத் தொழிலாளி, அந்நூலில் என்னென்ன குறைகள் கண்டு பிடிப்பானோ அவ்வளவு குறைகளும் அதில் இருந்தன. ஆயினும் அந்த நூல் என்னுடைய முதற் சிருஷ்டியாதலால் அதில் எனக்கு அளவு கடந்த இன்பம் உண்டாயிற்று. அதை இன்னும் நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்.

நூல்நூற்கும்வித்தையைக் கற்றுக்கொள்ளஎனக்கு இரண்டுநாட்களாயின. பிறகு பஞ்சை எடுத்துக்கொண்டால் விரல்களின் சந்து வழியாக நூல்தானே கிரமமாக வந்துகொண்டிருக்கும். விட்டு விட்டு



சுற்றிக் கொண்டிருந்த கைராட்டினமோ, இப்பொழுது தொடர்ச்சியான ஒரு சங்கீதத்தைப் பாட ஆரம்பித்தது. உத்தியோகஅலுவல்களிடையே அவ்வப்பொழுது ஏற்படும் ஓய்வு நேரத்தை இக் கைராட்டினத்தடியில் அமர்ந்து நூல் நூற்பதில் கழிப்பேன்.

உத்தியோகத்தில் எனது சகபாடியாயுள்ள நண்பர் ஒருவர் அடிக்கடி வந்து என்னைக் காண்பதுண்டு. இவர், அந்நியத் துணிகளையே மிக ஆடம்பரமாக அணிந்து கொண்டுவருவார். ஒருநாள் நான் இராட்டினத்தடியில் உட்கார்ந்து நூல் நூற்றுக்கொண்டிருந்த போது இந்நண்பர் வந்து பார்த்தார். ஆச்சரியத்துடன் "என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "நூல் நூற்றுக் கொண்டிருக்கிறேன்" என்றுநான்சாவதானமாகப் பதிலுரைத்தேன். அவர் ஆச்சரித்துடன் "நீங்கள் கூடவா நூற்கிறீர்கள்?" என்று கேட்டார். நூற்பதாகவே நினைக்கிறேன். நீங்கள் பார்ப்பதை நம்பவில்லையா?" என்று நான் சொன்னேன். "இந்நூலை என்ன செய்யப் போகிறீர்கள். விற்கப்போகிறீர்களா?" என்று அவர் கேட்டார். "எனக்கும் என் குடும்பத்தாருக்கும் போதிய உடைகள் தயாரித்துக் கொண்ட பிறகுதான். ஆனால் அக்காலம் வராதென்றே நினைக்கிறேன்" என்று நான் விடையிறுத்தேன். "நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் இந்த முரட்டுத்துணியையா உடுத்திக்கொள்ளப் போகிறீர்கள்?" என்று அவர் கேட்டார். "ஏன் உடுத்திக்கொள்ளக்கூடாது? அப்படிச் செய்வது குற்றமா ? அல்லது, இவைகளைத் தரித்துக்கொள்ளக்கூடாதபடி நமது தோல் அவ்வளவு மிருதுவானவையா ? இப்படிப் பாருங்கள் ! இந்தச் சுவர்களில் என்கையால் எழுதியபடங்களைத் தொங்கவிட்டிருக்கிறேன். என்னுடைய உணர்ச்சி இப்படங்களில் பிரதிபலிக்கிறது. இப்படங்களுக்காக நான் பட்டசிரமம், ஏற்பட்ட செலவு இவைகளின் பாதியைக்கொண்டு, இவைகளை விடச் சிறந்த படங்களை, பிரபலபத்திரிகைகளிலிருந்து நான் வெட்டியெடுத்துக் கொண்டிருக்கக்கூடும். ஆனால் அப்படங்களுக்கும் நமக்கும்என்ன சம்பந்தம் இருக்கிறதென்ப[illegible]க்கவேண்டும்

220498

பேனாக்கள் எழுவதற்கென்று நாமேஒரு கூண்டுசெய்து அதைநமது மேஜைமீது வைத்துக் கொண்டால் அப்பொழுது உங்களுக்குஎன்ன விதமான உணர்ச்சி உண்டாகிறதென்று நீங்கள் பாருங்கள். அப்பொழுது, நாமே ஒரு பொருளைச்செய்து கொண்டால் அதில்எவ்வளவு ஆனந்தம் இருக்கிறதென்பது உங்களுக்குப் புலப்படும்" என்று நான்பதில்கூறினேன்.

என்எதிரே இருக்கும் மரக்கட்டையின் (இராட்டினத்தின்) எதிர்காலவாழ்வு எவ்வளவு விசித்திரமாயிருக்கும் என்பதைப் பற்றி நான்யோசனைசெய்துபார்த்தேன். இதுசம்பந்தமாக மனிதன் தன் அறிவைப்பலவாறாகச் செலுத்தலாம். இராட்டினங்களில் புதிய மாதிரிகளைக் கண்டு பிடிக்கலாம். இந்தக்கைராட்டினம், நாகரிகம் என்பது எப்பொழுது உற்பத்தியாயிற்றோ அப்பொழுதே உற்பத்தியாயிற்று. இப்பொழுதும், மிகமெல்லிய இழைகளால் நெய்யப்பட்ட துணிகள் கையால் நூற்று நெய்யப்பட்டவைகளே. இதற்குக் காரணம், நமது அறிவையும் உணர்ச்சியையும் அத்தொழிலில் செலுத்துகிறோம். ஐரோப்பியக் கலைகோங்களிலுள்ள பொருட்காட்சிச்சாலைகளில் வைக்கப்பட்டிருக்கும் மஸ்லின்துணிகள் கையால் தயாரிக்கப்பட்டவைகளே.

ஒவ்வொரு மனிதனுடைய மனோ உலகத்திலும், 'சுய உற்பத்தியில் மகிழ்ச்சி' என்றஉணர்ச்சி இருக்கவேண்டுவது இன்றியமையாததாகும். யந்திரத்தினின்று மனிதனைப் பிரிப்பது இதுவேயாகும். இதற்காகக் கைராட்டினத்தை என் முன்னுக்குத் தள்ளவேண்டுமென்றால், இதன் முன்னேற்றத்தினால், நமது புராதனக்கைத்தொழிலொன்றுக்குப் புத்துயிர் கொடுப்பதாகும். இரண்டாவது இதனைப் புனருத்தாரணம் செய்வதால், இந்தியாவின் பொருளாதார நிலைமையும் சீர்படும். ஐரோப்பாவில் கையால் நூற்று நெய்யப்பட்ட துணிகளை உபயோகிப்போர் பலர் இப்பொழுதும் இருக்கின்றனர். சின்னாட்களுக்கு முன்னர், நான் ஒரு மத்திய வகுப்பு ஸ்திரீயுடன் தேயிலைப்பானம் பருகிக் கொண்டிருந்தேன். அப்பொழுது என்



கைக்குட்டை கீழேவிழுந்தது. அதைக்குனிந்து நான் எடுக்கும் போது, அம்மாது, அக்கைக்குட்டையின் கரைகளைக் கவனித்துப் பார்த்தார். "அஃது இந்திய மாதிரியா?" என்று அந்த ஸ்திரீ கேட்டார். "ஆம்; அது கையாலேயே நெய்யப்பட்டது" என்று கூறினேன். அவர் அதைநன்றாக உற்றுப்பார்த்து, "சிறிது முரடாயிருக்கிறதல்லவா?" என்று கேட்டார். "ஆம்; ஆனால் உங்களுடைய ஜர்மன் பவுண்டன் பேனாவும் அப்படித்தானிருக்கிறது. அமெரிக்காவில் உற்பத்திசெய்யப்படும் பேனாக்களுக்கு இருக்கும் அழகில் பாதிஅழகுகூட உங்கள்பேனாவுக்கு இல்லையே. தவிர, அவைகளின் விலை நயமாகவும் இல்லையே. அப்படி யிருக்க நீங்கள் ஏன் இந்த ஜர்மனி பவுண்டன் பேனாக்களையே உபயோகிக்கிறீர்கள்?" என்று கேட்டேன். "நீங்கள்கூறுவது ரொம்ப சரி; எனக்கு வேண்டிய துணிகளை நானே உற்பத்திசெய்து கொள்கிறேன். அவைகளை நானே தைக்கிறேன். எனவே, அவை, என்தேகத்தின்மீது சிறிது உணர்ச்சியையுண்டாக்குகின்றன" என்று அவ்வம்மையார் கூறினார்.

இத்தகைய உணர்ச்சி இல்லாதமனிதர் பலர் இருக்கின்றனர். தங்களுக்கும் தாங்கள் பெறும் பொருளுக்கும் என்ன சம்பந்தம் என்பதை உணராமலே அவர்கள் பணத்தைக்கொண்டு பொருள்களை வாங்குகிறார்கள். சிலர், தங்கள் வீட்டுப் பசுக்களின் பாலை உயர்ந்த விலைக்கு விற்றுவிட்டு, குறைந்தவிலைக்கு வேறுபாலை வாங்கிக் குடிக்கிறார்கள். இவர்களுடைய மனோநிலை எத்தகைத்தென்பதை ஆராய்ச்சிசெய்யவேண்டியது இன்றியமையாததாகும்.

மனிதனுக்கு இன்றியமையாதது, உணவும் உடையுமேயாகும். ஒவ்வொருவரும் தத்தமது தோட்டத்தில், தங்களுக்கு வேண்டிய கோதுமையை விளைவித்துக் கொண்டால் மனிதனுக்கு அதிக பசி உண்டாகும். அதே மாதிரி ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டிய உடைகளைத் தாமே உற்பத்தி செய்து கொண்டால், உடையைப்பற்றிய விசாரமும் நீங்கும். தவிர உடையைச் சரியாக அணியவேண்டுமென்ற ஆவலும் உண்டாகும். இதே மாதிரி, நமது வாழ்க்கைக்கு

வேண்டிய வேறு பல பொருள்களையும் நாம் உற்பத்திசெய்து கொள்ளலாம்.

—"யங் இந்தியா",

# பூமி நிற்பது எதன்மேல்?

இக்கேள்வி பூகோள சாஸ்திரம் கற்கும் பள்ளிமாணவரைச் சிறப்பாகக் கலக்கிவருகிறது. ஏனெனில் அவர்களுக்குப் பள்ளியில் போதிக்கப் படுவது ஒன்று வெளியில் புராணங்கற்ற பெரியோர் கூறுவது மற்றொன்று. பிறமதத்தினர் கூற்றும் ஒன்றுக் கொன்று மாறுபட்டு நிற்கின்றன. அவை:—

1. ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேஷன் பூமியைத் தாங்கி நிற்கிறான்: பௌராணிகர்
2. காளை மாட்டுக் கொம்பின்மேல் பூமி நிற்கிறது—மகம்மதியர்
3. எதன் மேலும் நிற்பதில்லை. அந்தரத்தில் சுழல்கிறது.
4. பரந்துள்ள ஆகாய வெளியில் நிற்கிறது
5. சூரியனுடைய கவர்ச்சி சக்தியால் தன்னிடத்தில் நிலைத்திருக்கிறது.
6. பூமி கனமாயிருப்பதால் நாளுக்கு நாள் கீழ்நோக்கி விரைந்து விழுகிறது, என்பன". இவற்றுள் உண்மை யெது? சாஸ்திரிய துறைகளிலெல்லாம் பெருங்கியாதி வாய்ந்தவரென்ற இந்துக்கள், இதன் உண்மையைச் சொல்லியிருக்க மாட்டாரா என்று நினைத்துள்ள போது, அதிர்ஷ்ட வசமாக சுவாமி தயானந்த சரஸ்வதிகள் எழுதிய சத்தியார்த்த பிரகாசம் என்னும் நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பில் இதன் உண்மை விளக்கப்பட்டிருந்தது. இன்று மேனாட்டார் கண்டுபிடித்தனெனக் கூறும் அதி ஆச்சரிய உண்மைகள் பல, பலகோடி வருஷங்களுக்கு முன்னேற்பட்ட வேதங்களில் கூறியுள்ளதை படிக்க மனம் பொங்கி எழுகிறது. ஆதலின் அதனை உள்ளவாறே மொழி பெயர்த்துத்தருகிறேன்.

"ஆதிசேஷனென்ற பாம்பும், காளை மாடும் பூமியைத்தாங்கி நிற்கிறது' என்று கூறுபவரை அவையும் அவற்றின் மூதாதையரும் 



பிறப்பதற்கு முன் பூமியை எது தாங்கி நின்றது? எனக் கேட்டால் காளைமாட்டு சித்தாந்திகள் பேசமாட்டார்கள். ஆனால் ஆதிசேஷன் சித்தாந்திகள், ஆதிசேஷன் கூர்மத்தின் (ஆமை) மீதும், ஆமைநீரின்மீதும் ஜலம் அக்னியின் மீதும், நெருப்பு காற்றின் மீதும், காற்று ஆகாய வெளியின் மீதும், நிற்பதாகக் கூறலாம். அனைத்தும் எதன் மேல் நிற்கிறது? என்றால் கடவுள் மீது என்பர். சேஷனும் எருதும் யாருடையசந்ததிகள் என்றால், கன்றுபசுவின் வழிவந்ததென்பர்: சேஷன் கூர்மனுக்கும், கூர்மன் மாரீசிக்கும், மாரீசி மனுவுக்கும், மனு விராடனுக்கும், விராடன் பிரம்மாவுக்கும் தோன்றியவரென்பர். இந்த பிரம்மா, படைப்பு காலத்தில் பிறந்தார். எனவே சேஷன் பிறப்பதற்கு முன் 6 தலை முறைகள் கடந்து விட்டன. ஆனால் இது வரை உலகத்தை சுமந்து நின்றது யார்? கஸ்யபன் (ஆமை) பிறப்பதற்கு முன் உலகம் எதன் மேல் நின்றது? என்றால் சரியான பதில் தரவழியின்றி, குதர்க்கம் செய்யத் துவங்கிவிடுவார்கள். சேஷம் என்பது (ஒரு இலக்கத்திலிருந்து மற்றொன்றை கழிப்பதால் மிகுந்து நிற்கிற மிச்சம் போல) எஞ்சி நிற்பது மிகுதி என்ற சொற்களின் பரியாய பதமாகும். ஏதோ ஒரு பண்டிதன் 'உலகம் சேஷன் மீது நிற்கிறது' என்றான். இப்பண்டிதனின் கருத்தறியாப்பாமரன் ஒருவன் உடனே சேஷம் என்பதை ஓர் பாம்பு எனவாக்கி இக்கதை கட்டி விட்டான். பண்டிதன் கூற விரும்பிய உண்மை என்னவோ பூமி கடவுளால்—சிருஷ்டி சங்கார காலங்களிலும் மாறுதலில்லாத ஒருவனால்—என்றும் நிலைத்து நிற்கும் ஒருபெரும் சக்தியால் நிலைத்து நிற்கிறது' என்பது. இந்த உலகில் மாறுதலில்லாமல் எஞ்சி அல்லது மிகுந்து, மிச்சமாய் நிற்பவர் கடவுள் ஒருவர்தான். "காலத்தால் தாக்கப்படாதவரும், அழிவு இல்லாமல் நித்தியமாய் இருக்கிற கடவுள் தான், சூரியன் பூமி முதலிய கிரகங்களை யெல்லாம்ஆதரித்து நிலைக்கச் செய்கிறார் என, அதர்வ வேதம் XVI, 1, 1. சுலோகத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

"உக்ஷா ஆதார பிருத்வீ பூதத்யாம்" உக்ஷா என்பது பூமி, சந்திரன் ஆகிய வற்றை நிலைக்கச் செய்கிறது' என்ற ஒரு வாக்கியம், ருக்

வேதத்தில் காணப்படுகிறது. உக்ஷா என்ற பதத்திற்கு ரிஷபம் or காளைமாடு என்றமற்றொரு அருத்தமும் இருப்பதால் 'உக்ஷா' என்ற சொல்லைக் கண்டவுடன் ஒருவன், மாட்டுக்கதையை புனைந்துவிட்டான். ஆனால் பூமியைப்போன்ற மிகப்பெரியதோர் கோளத்தை, ஓர் அற்ப மாடு எப்படித்தாங்க முடியுமென்பது இந்த மூடன் யோசிக்கவில்லை. 'உக்ஷா' என்பதற்கு இங்கு, சூரியன் என்று பொருள், ஏனெனில் அவனே மழைமூலமாக பூமிக்கு ஜலத்தை உதவுபவன். தன்னுடைய கவர்ச்சி சக்தியால் உலகத்தை நிறுத்துபவன். ஆனால் அவனையும் நிற்கச்செய்பவன் கடவுளன்றிபிறிதெவரும் இல்லை.

மகத்தான சூரியன், பூமி முதலிய கோளங்களைக் கடவுள்நிலைக்கச் செய்வது எப்படி?

விடை:—இவை இயங்கும் ஆகாய வெளியில் அகண்டாரப்பை யோசிக்கும் போது, இவை யெல்லாம் சமுத்திரத்தில் சிறு நீர்த்துளியைப் போன்றதாகும். இதைப்போலவே கடவுளின் எல்லையற்ற சர்வ வல்லமையைக்கருதும் போது கோடிக்கணக்கான இக்கோளங்களும் ஓர் அணுவை விடப்பெரிதாக இருக்க முடியாது. அவைகளின் உள்ளும் புறமும் அவன் ஊடுருவிநிற்கிறான் "அறிவல்லமையுடைய அவனே இவற்றை எல்லாம் சிருஷ்டித்துக்காத்து நிற்கிறான்" எங்கும் நிறைந்த சர்வ வியாபியாய் அவன் இல்லாமலிருந்தால் (மகம்மதியரும். கிறிஸ்துவரும், புராணிகரும் சொல்வதைப்போல) அவன் பூமியை நிலைக்கச் செய்யமுடியாது; ஏனெனில் தான் அங்கு நிதர்சனமாய் இருந்தாலொழிய, ஒருபொருளைத்தாங்கிநிற்றல் எவருக்கும் முடியாது. "கோளங்களெல்லாம் தமக்குச் சொந்தமான ஒருவகை சக்தியால் ஒன்றை மற்றொன்று கவர்ந்து நிற்கிறதென்று எவனாவது கூறுவானாகில், கடவுள் இவற்றை நிலைநிறுத்த வேண்டிய அவசியமே இல்லை யல்லவா? அப்படிப்பட்டவனை உலகம் அளவு உடையதா or அளவு கடந்ததா' எனக்கேட்கவேண்டும். 'அளவு கடந்தது என்பானாகில் தீர்மானமான உருவமுடைய எந்தவஸ்துவும் அளவுகடந்து இருக்கமுடியாதென்ற சிறு உண்மையால், அவன் கூற்றுபொய்யாகும்



'அளவு உடையது' என்பானாகில் 'தன்னுடைய கவர்ச்சி சக்திக்கு புறம்பானவைகளை யெல்லம் பிறகு யார் ஆதரிக்கிறார்? என கடாவ வேண்டும். வஸ்துக்களின் சேர்க்கைக்கு 'சமாஸ்தி' என்றும், தனிமைக்கு 'வியஸ்தி' என்றும் பொதுப் பெயர் வழங்கப்படுகிறது' ஆகாயத்திலுள்ள பல கோடி அண்டங்களுக் கெல்லாம் 'உலகம்'என்ற பொதுப்பெயர் வழங்குமானால், அவைகளை யெல்லாம் கவர்ந்து, நிலைக்கச் செய்பவர் கடவுளையன்றி பிறரெவரும் இருக்கமுடியாது. இந்த உண்மையைத் தான்"ஒளிதரும்கோளங்களான சூரியன் முதலியவற்றையும், பிரகாச மில்லாத பூமி முதலியவற்றையும் கடவுள் தான் சிருஷ்டித்து ஆதரிக்கிறான்; அவன் எங்கும் நிறைந்திருக்கிறான்; அவனே அனைத்தையும் படைத்துக் காப்பாற்றுகிறான் "என யஜுர் வேதம் XIII அ 4 சுலோகம் அறைகிறது" இதைப்படித்த பின்பாவது, ஹிந்துக்கள் தங்களின் மதஊற்றுவாயாகிய வேதங்களிலுள்ள பூகோள சாஸ்திர உண்மைகளை உணர்வார்களா?

(D N. V ராஜு கோயம்பத்தூர்)

# திரு முருகாற்றுப்படை: உரை நடை

பண்டிட் ம. சி. சபாபதி முதலியார் அவர்கள்.

திருச்சிராலைவாய்

(முன்தொடர்ச்சி)

நன்மக்களால் புகழப்பெற்று உயர்ந்த சிறப்பையும் புகழையுங் கொண்டநாமனூரலைவாயென்றும் திருப்பதியில் எழுந்தருளுதலும் அப்பெருமானின் நிலை பெற்ற குணமாகும். அங்குஎழுந்தருளும் பொழுது* யானையின்மேல் ஏறிக்கொண்டுவருவன். பலவகைப்பட்ட மணிகளால் இழைக்கப்பெற்றுப் பிரகாசிக்கின்ற முடிகளையும், மகரக்குழைகளையும் அணிந்தவனாயிருப்பன். தன் ஆறுமுகங்களாலும் அவற்றிக்கு ஏற்பனவற்றைச் செய்யும் பன்னிருகரங்களாலும் செய்ய வேண்டிய வற்றைச்செய்து விரைந்த நடையுடன் ஆகாயமே

வழியாகவந்து எழுந்தருளுவன். அப்பொழுது ஆகாயதுந்துமி முழங்கும்; வலியவயிரத்தையுடைய கொம்புகள்மிக்கு ஒலிக்கும்; வெள்ளியசங்குகள் ஊதப்பெறும்; வலிமையுள்ள இடியின் முழக்கத்தைப் போன்ற ஓசையுடன் முரசு அடிபடும்; அவன் ஆணையினால் பகைவர்களைவென்று உயர்த்தி எடுத்த கொடியின்மேலேயிருந்து பலபீலிகளையுடைமயில் அகவும்.

யானை :— கூரிய தோட்டி வெட்டி வடுவுண்டான * புகரையுடையமத்தகத்தைக் கொண்டது. அதன்முகபடாத்துடன் பொன்னரிமாலையும் அசையா நிற்கும் இரண்டுபக்கங்களிலும் மணிகள் தாழ்ந்து தொங்கி மாறி மாறி ஒலிக்கும். ஓடுங்கால் கடுங்காற்று எழுந்தாற்போன்ற கடியநடையையுடையது. பிறரால் தடுத்தற்கரிய கூற்றுவனை யொத்த வலிமையுடையது.

முடிகள் :— முடிக்கு உரிய ஐவகை வடிவங்களையுங் கொண்டவை. செய்யக்கூடிய தொழில்களெல்லாம் செய்து முற்றப்பெற்றவை. ஒன்றற்கொன்று அழகில் மாறுபாடுகொள்ளும்படி மணிகளால் பதிக்கப்பெற்றவை. மின்னலொடுமாறுபடுகின்ற ஒளியினையுடையவை.

மகரக்குழைகள் :— ஒளிதங்கி நிறைவோடும்படியாகத் தொழிற்கூறமைந்தவை. பொன்னாற்செய்யப்பெற்றவை. இக்குழைகள் திருமுடிகளையுடைய திருமுகங்களின் இருபக்கங்களிலும் பிரகாசிப்பதனால் அதிகாரத்தே தன் ஒளியைக்காலச்செய்யும் இயல்பையுடைய வானின்கண் உள்ள சந்திரனைச்சூழ்ந்து நீங்காதிருந்துகொண்டிருக்கும் மீன்கள்போலக்காணப்படும்.

திருமுகங்கள் :— குற்றமில்லாத விரதங்களைக் கொண்டுதலைக் கைமுடிப்பவர்களின் மனத்தில் பொருந்தித் தோன்றும்படியான ஒளியையுடைய நிறங்கொண்டவை. 1: அம்முகங்களில் ஒன்று,பெரிய இருளைக்கொண்ட உலகம் குற்றமில்லாது விளங்கும்படி பலகிரணங்களையும் தோற்றுவித்தது.



2. ஒன்று தன்மேல் அன்புகொண்டவர் துதிக்கஅதற்கு இணங்கி அவருக்கு இனிமையுண்டாக நடந்து அவர்மேற்சென்ற காதலால் மகிழ்ந்து வேண்டுபொருள்களை முடித்துக் கொடுத்தது.

3. ஒன்று மந்திரத்தையுடைய வேத முறையிற்றப்பாத அந்தணரின் யாகங்களில் தீங்குவாராதபடி நினைத்தது.

4. ஒன்று இவ்வுலகில் வழங்கப் பெறாத வேதங்களிலும் நூல்களிலும்உள்ளபொருள்களை ஆராய்ந்து இருடிகள் இரட்சையடையும் பொருட்டு உணர்த்தி மதியைப்போலத் திசைகளெல்லாவற்றையும் விளக்கிற்று.

5. ஒன்று தன் திருவுள்ளத்திற் செல்லுகின்ற நடுவு நிலைமையைக் கெடுத்து இவர்களைக் கொல்லவேண்டுமென்று கோபங்கொண்டு பகைவராகிய அசுரர்முதலியோரை வேரோடு அழித்துக் கெடுத்துக் களவேள்வியை விரும்பிற்று.

6. ஒன்று குறவரின் மகளாகிய மடப்பங்கொண்ட வல்லி போலும் இடையையுடையவள்ளி நாயகியாருடன் மகிழ்ச்சி கொண்டு புன்னகைகொண்டது.

மார்பும் தோள்களும் :— பொன்னாற்செய்த அந்தத்தைத் தாங்கிஅழகைக் கொண்டவிசாலமான மார்புஉத்தம இலக்கணமாகிய சிவந்த மூன்று வரிகளையுடையது. தோள்கள் அவ்வரிகள் தம்மிடத் தேவந்து விழும்படி வாங்கிக்கொண்டன. தம்முடைய வலிமையினால் புகழ் நிறையப்பட்டவை. மெருகிமிர்ந்தவை. சுடரையுடைய படைக்கலக்களை யெறிந்து பகைவர்மார்பைப்பிளந்து அதற்கு அறிகுறியாக அவ்வரிகளை அத்தோள்கள் வாங்கிக்கொண்டன என்றுசொல்லும் படிக்கு அவைதோள்களில் காணப்படும்.

கைகள் :— அத்தோள்களில் ஒருகை எக்காலமும் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் தெய்வஇருடிகளுக்குப்பாதுகாவலாக எடுத்தது. அதற்கிணைந்த மற்றைக்கை இடையிலே வைத்தது. (1,ம் முகம்)

ஒருகை தோட்டியைச் செலுத்திற்று. அதற்கிணைந்தமற்றக்கை சிவந்த ஆடையைக்கொண்டதொடையின் மேலேகிடந்தது. (2.ம்முகம்)

இரண்டு கைகள் கருமைநிறம் பொருந்தி ஆச்சரியத்தை விளைவிக்கும்படி பரிசையுடனே வேலாயுதத்தையும் பலமாகச் சுழற்றிற்று. (3.ம் முகம்)

ஒருகை முனிவர்களுக்குத் தத்துவங்களைக் கூறிவேதாகமங்களிற் கூறமுடியாத பொருளையுணர்த்துங் காலத்தில் மார்போடு விளங்கவைத்தது. அதற்கிணைந்த மற்றைக்கை மார்பில் தாழ்ந்து அசைந்து கொண்டிருக்கும் மாலையோடு சேர்ந்து அழகு பெற்றது. (4.ம் முகம்)

ஒருகை தொடியோடுமேலே சுழன்றுகளவேள்விக்கு முத்திரையைக்கொடுத்தது. அதற்கிணைந்த மற்றக்கைநல்ல ஓசையையுடைய மணியை ஒலித்தது. (6.ம் முகம்)

ஒருகை நீலநிறங் கொண்ட மேகத்தாலே மிக்கமழையைப் பெய்வித்தது. அதற்கிணைந்த மற்றைக்கை தெய்வமகளிர்க்கு மணமாலையைச்சூட்டினது. (6.ம் முகம்)

(இன்னும் வரும்)

# ஆரோக்ய தரிசனம்.

[Dr. D. S. P. ராஜா.]

## துயிலுணர்ந்து நினைப்பன.

"யன்மனஸா த்யாயதிகத் வாசா வததி
யத் வாசா வததி தத் கர்மணாகரோதி
யத் கர்மணாகரோதி, ததாபி ஸம்பத்யதே

சதபாத பிராமணம்

எண்ணிய எண்ணியாங் கெய்தல் பேராற்றல்வாய்ந்தது நினைவு. ஒருவன் இடைவிடாது எதனைப் பன்முறையும் ஊன்றி நினைவுறுகிறானோ அதனையே பேசுகிறான்; அழுத்திப் பேசுவதெதனையோ அதனை காரிய முறையில் நிகழ்த்துகிறான். உருற்றும் வினையைச் சார்ந்தே வினையும் பயனும் மலர்கிறது; அடையும் பயனைத் தொடர்ந்தே இன்ப துன்பங்கள் கனிகின்றன. இவை கொண்டே ஒருவன் வாழ்க்கையின் சிறப்பு இழிவுகள் நிறுவப்படுகின்றன.



எனவே, நினைவிற்கும் வாழ்க்கைக்கும் உள்ள நீக்கரும் தொடர்பு தேற்றமல்லவோ?

"சொர்க்கத்தை நரகமாக்கி விடுவதும் மனதுதான்! நரகத்தை சுவர்க்க மாக்கிவிடுவதும் மனதுதான்" என்பதும் கவி மில்டனின் வாக்கு இதன் பொருளையே.

"மந எவம் மனுஷ்யாணாம்
காரணம் பந்த மோக்ஷ யோஹோ"

என்னும் வடமொழிச் சுலோகமும் மனம் போல மாங்கல்ய மென்ற எளிய சிறு தமிழ் வாக்கியமும் விரிக்கின்றது. "பெரும் மாளிகை சிறுகற்களின் கட்டத்தாலாவது போல மனிதவாழ்க்கையின் ஓங்கிய சிறப்பும் நாடோறு முதிக்கும் அற்ப எண்ணங்களினாலேயே எழுகிறது" என்பதும் சுவாமி விவேகானந்தரின் வாக்கு. இவைகளால் நினைவின் ஒப்பற்றவலிமை ஒருவாறு புலப்படினும் அதற்கும் ஆரோக்கியத்திற்குமுள்ள தொடர்பென்னை என்பதன்றோ நமது கேள்வி.

### நினைவும் உடலும்.

"உன்மாதம், மந்தபுத்தி, ஆசய, பேரீபக்ஷவாதம், மிகுவியர்வை, விஷபேதி, காமாலை, இளநரை, வழுக்கை, திடீரென பல் அழுகல், நரம்பு அதிர்ச்சியாலும் நீராத பாண்டு, கருப்பாசய நோய்கள், கருச்சிதைவு, படைசொரியாகிய சர்மரோகங்கள் முதலிய பலவேறு நோய்த்திரளெல்லாம் பயங்கர ஆரோக்யவைரிகளான நினைவினாலேயே உண்டாகிறதென உறுதி கூறுகிறேன்"

Dr Tuke's Influence of mind upon the body,

"கடுமையான திகில் மனதில் நிலவும்போது மஞ்சள் சுரத்தை வருவிக்க எளைய அதன் கிருமிகளும் பிறவும் வேண்டா. பயமே ஓர் பெரும் தொத்து வியாதி இது மின்னலினும் விரைவாகத்தொத்துகிறது. நமது நெருங்கிய உறவினரும் நண்பருமே சில சமயங்களில் தமது சொற்களால் இதனைப் பரப்புகிறார்கள் என்பது தொத்து வியாதி நிபுணரான Dr. W. H. Holcomb ன்முடிபு. "பெருள்

தொகையான கட்டிகளும், மார்பு கருக் குழிகளில் சிறப்பாக தோன்றும விப்புருதிகளும் மானத ஏக்கம் கவலைகளினாலேயே உண்டாகின்றன"

Dr Snow London Lancet.

காமாலை, கவலையால் வருகிறது'

Dr. Churton, B. N. Journel

வெகு சிறப்பாக மனத்தாங்கலான நினைவுகளால் கல்லீரல் (**Liver**) தாக்கப்படுகிறது. கடுமையான நீண்ட—அடிக்கடி தோன்றும் கோபத்தாலும் மானத அதிர்ச்சியாலும் காமாலை தொடர்கிறது. கல்லீரல் கட்டியால் வருந்தும் நோயாளிகள்பலரைக் கேட்டதற்கு, நீண்ட நாட் துயரும் ஏக்கமுமே அந்நோய்க்கு காரணமானது அறிந்து வியப்படைந்தேன். ஏதோ சில காரணங்களால் மட்டும் இவை நீடிமெனத்தோன்றுகிறதெனக் கூறுவதற்கில்லை"

Dr. Murchison,

மானத கிளர்ச்சிகளுக்கு உடலின் ஆசயங்கள் பல நொடிப் பொழுதில் அடிமைப்படுகின்றன. கடுலோபம், பிறர் பொருளை வவ்வும் நினைவு, பொறாமை முதலிய நினைவுகள், சிறப்பாககல்லீரல் மண்ணீரல் (பிலீகம்) இவைகளைத்தாக்குகின்றன. பகைமையும்கோபமும் யக்ருத் பிலீக நோய்களல் கொடு மாதிக்கத்தை செலுத்துகின்றன. பொறாமை, இந்தய, கல்லீரல்களை கடுமையாக குலைக்கிறது."

Swett Mardon.

என வரும் அறிஞர் உரைகளால் புலர்வதென்னை? நினைவிற்கும் உடல் நோய்க்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதல்லவோ? எனவே நோயற்ற வாழ்விற்கு நல் நினைவு வேண்டுமென்பது அங்கைக்கனி. இயற்கை ஊக்கிகளுள் தூய நினைவும் உயர்நோக்கமும் ஓர் பகுதியெனவும் முன்னரே கண்டோம். எனவே, இச்சிறந்த நினைவுகளை நாட்தொடக்கத்திலேயே வளர்க்க முயல்வது மிக அவசியமானது. இவற்றையெல்லா முணர்ந்தே நம் காசி காண்டமும்



வைகறையில் துயில் நீங்கி ஐங்கரனை மணிமிடற்றுவாதனோடு
நெய்கனிந்த கருங்கூந்தல் மலைமகளை திருவினொடு நெடியோன்தன்னை
பைகலந்த பாம்பணையான் திருவுந்தி பூத்தவனை பனுவன் மானை
மொய்கலந்த கொடிங்குலிசப்படையேந்து புரந்தரனே முதலினோரை.

கங்கை முதற் பெயராற்றைக்கனை திரைபால் கடன் முதலாங் கடலை
[வான்றோய்
மங்குதவழ் திருச்சயில முதலானமால்வறையை வசிட்டனாதி
பொங்குபுகழ் மாதவரை அருந்ததியே முதலாயபுறைதீர் கற்பின்
மங்கையரைக் கவினொழுகும் உருப்பசியே முதலாய மடநல்லாறை.

காசிமுதல் மாநகரைக் கவுத்துவமா மணி முதலா மணியைக்காமர்
வாசமலி மந்தார முதல்ன செழுந்தருவை வரிவண்டார்த்து
முசுநனைக் கவின் ஐயிராவ முதலாங் கடகளிற்றை முறைவழாது
தேசுதிகழ் சனகன்முதல் யோகிகளைச் சேடன்முதல் வாளாரவை

இருக்கு முதற் பழமறையைப்பிரணவமே முதலாய எழுத்தை நீங்கா
திருக்கிளர் நாரதன்முதலாந் தெய்வமறை முனிவரறைத் தேனுவாழி
யுரைக்குமுயர்பசுவை அரிச்சந்திரனே முதலாய உண்மை வேந்தை
குறைக்கு நெடுங்கடல்வறைப்பில்திசி முதல் வறையாவதுகொடுத்து
[ளோரை

கனிற்றருங் காயத்திரியே முதலாய மந்திரத்தை நறுந்தண்போது
துளைத்துவரி வண்டுழலும் நன்தனமே முதலாய சோலைதன்னை
உவப்புடன் இந்திரனுகைக்கும்பரி முதலாம்வாம்பரியை உலகில்நீர்த்த
என்றிலுக்கு மேலாய தந்தைதாய் மலரடியை இதயத்தெண்ணி".

இவையேயன்றி இன்று நாம் அடுத்தடுத்து கேள்வியுறும் இற்றைநாட் பெரியாரான சிவாஜி, தேசிங்கு, தயானந்தர், திலகர், விவேகானந்தர், அறவிந்தர், சித்தரஞ்சனர், லஜபதி, காந்தியடிகள், தாகூர், போஸ், ராய், முதலிய உத்தமர் வாழ்வைப் பற்றி நிதமும் சிந்தித்தால் பெரும் பயன் பயக்கும். நஞ்சிறுவர் எழும்போதே துருவன், மார்க்கண்டன் பிரகலாதன், அபிமன்யு, பாஞ்சால மதனமோகனாதிய இளஞ்சிங்கங்களை நினைவுறல் எத்தகைய வலிமை ஊட்டுமென்பதையும், அஃது அவர் பிற்கால வாழ்வை எவ்வாறு உறுவாக்க வல்லதென்பதையும் சற்று உன்னுக.

இவ்வாறாயசிரிய நினைவுகளோடு வயதேற்ற முடையாரும் "அந்நாளில் செய்வதற் குரிய தரும காரியங்களையும் பிற்றை ஞான்று செய்யும் நல்லறத்தையும் ஒள்ளிய பொருட்கு வருவாயாகிய காரியத்தையும் ஆராய்ந்து சிந்தித்து, பின்னைகங்குல் புலர்ந்தால் பழுதின்றி பெற்றோரைத்தொழுது எழுந்து ஓர்காரியத்தைத் தொடங்குக" என்பதையே

"வைகறை யாமந்துயிலெழுந்து தான்செய்யும் நல்லறமும்ஒண்பொருளும் சிந்தித்து—வாய்வழில் தந்தையும்தாயும் தொழு தொழுக என்பதே முந்தையோர் கண்ட முறை" என ஆசாரக் கோவை சுருக்கிக் கூறும்.

"நோய்வாராமலும் வந்தபின் அதிகமாகாமலும் உயிர்ச்சேதம் விளைவிக்காமலும் தன்னைத்தானே கருவியாகக்கொண்டொருவன் செய்யக்கூடிய காரியங்களுள் ஆரம்பத்திலேயே வியாதியைக்கண்டு பிடிப்பதும் சிகிச்சை செய்துக் கொள்வதுமே முதன்மையாகும். நம்மையும் குழந்தைகளையும் அவ்வப்போது வைத்திய பரீக்ஷைக்கு உட்படுத்திக்கொள்வதை வழக்கமாய் ஒவ்வொருவரும் அனுசரிப்பதே நோயைத்தடுக்கும் வழிகள் அனைத்திலும் மிகச்சிறந்தது என கருதுகிறேன்" என்பதாக (Dr Horace Dobell) நோய் நீக்க பருவப் பரீக்ஷையின் அவசியம்' என்ற நூலில் அழுத்திக் கூறியுள்ளார். 1864ஆம் வெளியான இந்நூலின் அவசியத்தை இன்றுதான் அரசாங்கத்தார் உணர்ந்து கைக்கொண்டுள்ளார். இதனாலேயே பள்ளிக்கூடங்களில் ஆடம்பரமான வைத்ய பரீக்ஷைகள் இன்று நடைபெறத்துவங்கியுள்ளன!

எனினும் பிறரிடத்து இவை இன்னும் வரவில்லை. ஆனால் இத்துறையில் ஒருவனை ஊக்குவதற்கும் அற்பநோய்களை மருந்துவரிடஞ் செல்லாமலே தீர்த்துக் கொள்ளுவதற்கும் தூண்டுவது எது? தன் உடலைப் பற்றிய நினைவன்றோ? இதனாற்றான் பிறநினைவுகளோடு 'ஆரோக்ய சிந்தனையும்வேண்டும்; உடலுக்கு அற்பஆயாசம் ஏற்பட்டாலும் உடனே அதன் காரணமறிந்து நீக்க முயல்' எனப் பொருள்படும்.



பிராம்ஹே முஹூர்த்தே உத்யேத்
தர்மார்த்தொசானு சிந்தயேத்
காயக்லேசாம்ஸ தன் மூலான்
வேத தத்வார்த்த மேவச"

என்னும் அதியுன்னத விதியைமனு தர்மம் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே நமக்கு வழங்கியுள்ளது. இது டாக்டர் டோபெல்லின் உபதேசத்தைவிடச் சிறந்த தல்லவோ? அதற்கும் காரணமாயதன்றோ ? சற்றுசிந்திக்க. இவ்வாறாய அதிநுண்ணிய சுகாதார தத்துவங்கள் எல்லாம் சலித்துக் கிடக்கும் நாட்டு நூல்களின் ஏற்றத்தை இனியேனும் நம்மவர் உணர்வாரா? கொண்டு நடப்பாரா? ஆரோக்கியம் நிலைக்கும் நல்லெண்ணங்கள் எவ்வாறு இன்றியமையாத தெனக் கண்டோம். இதன் ஆவயகத்தைஎத்துணை முறைவலியுறுத்தினும் கூறியதுகூறல்என்னும் குற்றமாகா தெனக்கருதுகிறோம்

நினைவின் வலிமை

நினைவு, உலகத்தை ஆக்குகிறது எதனைம் நினைவால் பெறலாம் மரணம், நோய், வறுமை, அடிமைத் தனம் ஆகிய இவற்றில் ஒன்றையோ அல்லது அனைத்தையோ ஜெயிக்கலாம் "நான் பலவான் வீரன் என்றஒப்பற்றவோர் நினைவை உள்ளுறப் பற்றி அமைதியாக உறுதியாக—தயக்கமின்றித் தீவிரமாக—ஆனால் படோடோப மின்றி—நிறைவ முயல்வதுசிறந்தது. இவ்உறுதியான ஓர் நினைவின் முன் (சங்கற்பம்) பிறகாரணங்களெல்லாம்—எத்திறத்தவாயினும்—தளர்வுற்று சரண்புக விரைகின்ற—" Karmayogin Vol I, No. 36*

* ஆதலின் இதனை, அறிவித்த யோகியரின் பெயர் மணத்தவோர் வாநுஇதழின் சொற்களைக் கொண்டேமுடிப்போம்.

## துன்மார்க்கத்திற்கு வரி

[விமோசனம் எழுதுவது]

1743ம் வருஷத்தில் ஹவுஸ்—அப்லார்ட்ஸ் என்னும் இங்கிலாந்தின் பிரபுக்கள் சபையில் ஆசாங்க வருவாய் சம்பந்தமாக

ஒருவிவாதம் நடந்தது அப்போது லார்ட் செஸ்டர்பீல்டு என்பவர் பேசியதாவது:

"பிரபுக்களே! சுகபோகத்துக்கு வரிவிதிக்கவேண்டும்; துன்மார்க்கம் கூடாதென்று சட்டம்செய்யவேண்டும். இது தான் முறை. சட்டத்தை அமுல் நடத்துவதிலுள்ள கஷ்டங்களுக்காக இதைக் கைவிடல் சரியன்று. பாவத்துக்கு வரி விதிப்பீர்களா? ஏசு நாதரின் பத்து சன்மார்க்கக் கட்டளைகளை மீறி நடப்போர்மீது வரி போட்டு வருவாய் தேடுவோமா? அத்தகையவரி அபகீர்த்திவாய்ந்ததாகாதா? வரிகொடுக்கச் சக்தியுள்ளவர்களெல்லாம் தாராளமாய்ப் பாவம் செய்யலாமென்று சொல்வது போலாகாதா? பிரபுக்களே! துன்மார்க்கம், வரிபோட்டு வசூலிப்பதற்குரிய உடைமையன்று. அதை அடியோடு அழித்துவிட வேண்டியது. சுகபோகங்கள் அளவுக்கு மீறிப்போனால்தீமைவிளையும்; எனவேஅவற்றிற்குவரிபோட்டுத்தடை செய்தல் நியாயம். ஆனால்தங்கள் இயல்பிலேயே தீமையானவைகளை அடியோடு ஒழிக்கவேண்டும். எந்த நாட்டிலாவது திருட்டுக்கும், விபசாரத்துக்கும் வரிபோட்டு வசூலித்ததாக நாம் கேள்விப்பட்டதேயில்லை. ஏனென்றால், ஒரு காரியத்துக்கு வரி போட்டோமாயின், வரி கொடுக்கத் தயாராயுள்ளவர்கள் அதைத்தாராளமாகச் செய்யலாமென்று அநுமதிகொடுப்பதேயாகும். குடிவெறியோ எந்தவிடத்திலும், எந்தசந்தர்ப்பத்திலும் தீமை யுள்ளது; ஆகலின் அது தண்டிப்பதற்குரிய குற்றம். அதற்கு வரிபோட்டு வசூலித்தல்தகாது

"எனக்கு முன்பேசிய பிரபு, சாராயங் காய்ச்சுவதை எவ்வளவோ ஜனங்கள் ஒரு தொழிலாகக்கொண்டு பிழைத்து வருகிறார்களென்றும், அவர்கள் மிகுந்த கைத்திறமை பெற்றிருக்கிறார்களென்றும், ஆகலின் அத்தொழிலுக்கு எவ்வித இடையூறும் செய்யக் கூடாதென்றும் கூறினார். பிரபுக்களே! இந்தவாதம் எனக்கு அளவில்லா ஆச்சரியத்தைத் தருகிறது. இந்தத்தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருள் எத்தகையது? அது கைகால்களை மெலியச்செய்கிறது; குணத்தையும் குலத்தையும் கெடுக்கிறது; மதியை மழுங்கச்



செய்கிறது. இத்தகையபொருளை உற்பத்திசெய்வோர் அநேகர்உளர் என்பது அதற்காதாரவான ஒரு காரணமாகுமா? திருடர்கள் பெருந்தொகையினராயிருக்கிறார்கள் என்றகாரணத்தின்மேல், திருட்டுச் சட்டத்தை ரத்து செய்ததாக யாரேனும் கேள்விப்பட்டதுண்டா? உண்மையில், தேசமக்களின் சன் மார்க்கவாழ்வைக் கெடுக்கும் முயற்சியில் தலைப்பட்டவர்கள் இவ்வளவு அதிகபேர்இருக்கும்பட்சத்தில் நாம்செய்யவேண்டிய தென்ன? வெள்ளம் தலைக்குமேல் போவதற்கு முன்னால் இந்த க்ஷணமே தலையிட்டு அவர்களுடைய நாசவேலையை நிறுத்த வல்லவா வேண்டும்? பிரபுக்களே! சாராயங்காய்ச்சுவோரின் அதிசயமான கைத்திறமையைப்பற்றி அபாரமாய்ச்சொல்லப்படுகிறது. நாவுக்கு ருசியான விஷம் தயாரிக்கும் கைத்திறமை எவ்வளவு அதிசயமானதாயினும், அது மக்கட்குலத்துக்கு நன்மை பயப்பதன்று என நான் கருதுகிறேன். கொலைஞன் ஒருவன் வெகுநாள் பழக்கத்தினால் தன் கொலைத்தொழிலில் மிக்க தேர்ச்சி பெற்றிருந்தானாயின், அதன் பொருட்டு அவனை மன்னித்துவிட வேண்டுமென்று சொல்ல யாரேனும் முன் வருவார்களா? பிரபுக்களே! உண்மையில் இவர்கள் தயாரிக்கும் சாராயம் அவ்வளவு இனியதாயின், ஜனங்கள் ஏமாந்து அதைக்குடித்து அழிந்துபோகாவண்ணம் அச்சாராயப் பீப்பாய்களை உடைத்தெறிவோமாக. மனித வதை செய்வதில் அதிசயக் கைத்திறமை பெற்ற இத்தொழிலாளிகள், நாட்டிலே நோயும் துன்பமும் மலிவதற்குக் காரணமானவர்கள்; தப்பிக்க முடியாத வகையில் ஜனங்களை மயக்கி இழுத்து விபசாரம் என்னும் படு குழியில் வீழ்த்துபவர்கள்; இவர்களுடைய கைத்திறமையையும் தொழிலையும் இந்த க்ஷணமே நாம் நசுக்கி அழித்துப்போட்டு ஜனங்களை மீட்போமாக."

## மதுவிலக்கு உண்மைகள்.

நம் தென்னாட்டில் குடியினால் மட்டும் நாள் ஒன்றுக்கு 5லக்ஷம் ரூபாய் செலவழிகிறது.

சென்னை மாகாண சர்க்காருக்கு வருடமொன்றுக்கு நிலவருமா

னம் 7 கோடி. கள்ளு வருமானம் 6 கோடி. தனவந்தர்கள் செலுத்தும் வருமானம் 2 கோடி.

மதுபானத்தின் கொடுமை உடனே தெரியவராது. ஆனால் நாளடைவில்தான் தெரியவரும். பைத்தியக்கார வைத்தியசாலையில் வந்து சேருபவர்களில் 100க்கு 25 பேர் குடியினால் மூளை கெட்டவர்களாக இருக்கிறார்களெனச் சென்னை அரசாங்கத்தின் விளம்பர இலாக்கா வெளியிட்டிருக்கிறது.

அமெரிக்கா அரசாங்கத்தார் பூரண மதுவிலக்குச் சட்டம் செய்ததினால் அவர்கள் இழந்த கள்ளு வருமானம் மட்டும் குறைந்தது 190 கோடி ரூபாயெனத்தெரிகிறது.

## மண்ணைப் பொன்னாக்கின வேளாளன்.

நாகரீகப்பித்தன் எழுதுவது.

என் தகப்பனார் சொல்ப சொத்தைக் கொண்டவராயிருப்பினும் அவர் உழவு தொழிலில் தான் அதிக பிரிய முள்ளவர். எங்கள் குலம் வேளாளர் குலம். வேளாளன் பயிர்த்தொழில் புரிவது இயற்கையே எனினும் தற்கால நாகரீகத்தில் வேளாளர்களில் பயிர்த்தொழில் செய்வதைக் கேவலமாக சிலர் எண்ணுகிறார்கள். அப்படி நினைத்ததில் நானும் ஒருவன். என் பிதாவுக்கு நான் ஒரே பிள்ளை. என்னை அன்புடன் வளர்த்து, தற்கால நாகரீகக் கல்விச்சாலையில் படிக்கவைத்தார். தற்கால நாகரீக உடையில் எனக்கு அதிக அவா. ஆகையினால் என் நண்பர்களும் என்னுடன் படித்த மாணவர்களும் என்னை நாகரீகப்பித்தன் எனக் கூப்பிடுவது வழக்கம். எனக்கு 22 வயது நடக்கும் பொழுது நான் B.A. முதல் வகுப்பில் படித்து வந்தேன். அச்சமயம் என் தகப்பனாருக்கு சொத்திற்கு மேல் கடன் உண்டாய்விட்டது. காரணம் என்ன வெனில் என்னைப்படிக்கவைத்ததே. நான் கடனைப்பற்றி கனவிலும் எண்ணுவதில்லை. ஏனெனில் B, A. பாஸ் செய்து விட்டால் ஓர் பெரிய வக்கீலாகவோ அல்லது ஜட்ஜாகவோ வந்தால் சுலபத்தில் கடனைக்கட்டிவிடலாம் என நான் அடிக்



கடி எண்ணுவதுண்டு. என்னுடைய பிடிவாதத்தால் என் பிதா B.A வரையிலும் படிக்க வைத்தாரேயன்றி அவர் சந்தோஷத்துடன் படிக்கவைக்கவில்லை. என் பிதா நான் 10-வது வகுப்பு (VI Form) படித்தால் போதுமென்றும், பிறகு ஏதாவது கைத்தொழிலில் பழக வேண்டுமென்றும் அடிக்கடி சொல்லுவார். ஆனால் இவர் சொல் எனக்கு சந்தோஷத்தைக் கொடுப்பதில்லை. இங்கனமிருக்க நான் B.A. இரண்டாவது வகுப்பில் படிக்கும்போது கல்கத்தாவுக்கு உதைபந்தாட்டத்திற்கு (Food Ball Match) சென்றிருந்தேன். உதைபந்தாட்டத்தில் தோல்வியென்பது ஒருபக்கம் எப்பொழுதும் உண்மையே. இல்லையேல் இரண்டுகட்சியும் சிலசமயங்களில் சமமாயும் இருக்கும்: கல்கத்தாவாசிகளுடன் போட்டி போட்டு உதைபந்தாடின சென்னை வாசிகள் தோற்றுவிட்டார்கள். சென்னையினின்று கல்கத்தா சென்று உதைபந்தாடி தோற்றது எனக்கு அதிககவலையை உண்டுபண்ணிவிட்டது. நான் தனிமையாக ஓர்மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு அதிக விசனத்துடன் இருந்தேன். என்விசனக்குறியைக்கண்ட ஓர்வங்காள இளைவன் என்னிடம்வந்து "என்ன, மதராஸ் வீரரே! நீங்கள் மண்ணைப்பொன்னாக்க மனோராஜ்ஜியம் செய்கிறீர் போல்தோன்றுகிறது". என்று கூறினான்.. உடனே நான் அதிகவெட்கமடைந்து அன்றிரவே சென்னை மெயில் ஏறி சென்னைவந்து சேர்ந்தேன். சென்னை வந்ததும் 200ரூபாய் சம்பளத்தில் ஏதாவது ஓர்வேலைகிடைக்குமா எனஎண்ணி 500ரூபாய் வரையிலும் செலவுசெய்து கடைசியில் ஒன்றும் கிடைக்கவில்லை; கடைசியாக ஓர்குமஸ்தாவேலையாவது கிடைக்குமென 6மாதம் பிரயத்தனப்பட்டும் கிடைக்கவில்லை. ஆ! நாகரீகக்கல்வியின் மகிமையை என்னென்று சொல்வது! என்னைகாப்பாற்றிக் கொள்ளக்கூட என்கல்விபயனற்றதாய் முடிந்ததே என எண்ணி எண்ணி என்மனமும் பயித்தம் பிடிக்கும் தருவாயில் வந்துவிட்டது. என்னிலையை உணர்ந்த என்பிதா "நமக்குச்சொல்பமாயுள்ள நிலத்தையேனும் நீ உழுது பயிர்செய்தால் நம்கடனும் நீங்கி நாமும் கொஞ்சம் சௌக்கியமடையலாம்" எனச்சொன்னார். இதையேற்றுக்கொண்டு

உடனே உழவுதொழிலில் யீடுபட்டேன். என்தோட்டத்தில் பலவித கனிவர்க்கங்களும், மிளகாய், புகையிலை முதலியவைகளும் வைத்து ப்பயிர்செய்தேன். வேளாண் மைத்தொழிலில் ஈடுபட்டநாள் முதல் எனக்கு மனோவியாகூலம் சிறிதும் எற்ப்பட்டது கிடையாது. என்தோட்டத்திலுள்ள பழவகைகள் வாரமொன்றுக்கு 10 ரூபாய் க்குவிற்பனையாகும். இதிலிருந்து ஒருவருடத்திற்குள் எங்கள் கடனையும் தீர்த்துவிட்டோம். கடன் தீர்ந்த பிறகே வங்காளவீரன் சொன்ன மண்ணைப்பொன்னாக்கிய கனவுஉண்மையாயிற்று. என்னு டையதோட்டம் நாளுக்குநாள் நல்லவிருத்தியை அடைந்துவந்தது. இங்கன மிருக்க என்பழைய வங்காளநண்பர்களை என்தோட்டத் திற்கு ஒருநாள் கூட்டிக்கொண்டுவந்து உங்கட்கு இஷ்டமான பழங் களைப்பரித்துச்சாப்பிடுங்கள் என்றுசொன்னேன். அச்சமயம் ஓர் வங்கவீரன் "உதைப்பந்தாட்டத்தில் சொன்ன விளையாட்டுச்சொல் இன்று தாங்கள் செய்கையில் காண்பித்து மண்ணையும் பொன்னாக்கி எங்கள் முன்னிலையில்காண்பித்தீர்கள். இனிநாங்களும்எங்கள் முன்னோர்கள் செய்த உழவுத்தொழிலைக்கைக்கொண்டு மண்ணைப் பொன்னாக்கி மனக்கவலையை நீக்கி சுதந்தரத்துடன் வாழ ஆசை கொள்கிறோம்: உங்கள் நன்றிக்கு எங்கள்வந்தனம் உரியதாகுக என்றான். வேளாண்மையே விசனமற்றதொழில். இனிமேலும் ஆங்கில கல்வியில் உயர்ந்தப்பட்டம் பெற்றாலும் எங்ஙனம் உழவுதொழில் செய்வது என்று 20 ரூபாய் உத்தியோகம் கிடைத்தாலும் போது மே, என்ற எண்ணத்தைவிட்டு வேளாண்மையைக்கைக்கொண்டு, மண்ணைப் பொன்னாக்கி துன்பம் நீங்கி இன்பமடைவார்களாக.

# இளைஞர் பகுதி

## சுகாதார விதிகள்.

1. சூரிய வெளிச்சமும் நல்ல காற்றும் தேகசௌக்கியத்திற்கு அத்யாவசியமானவை. 2. பகற் காலங்களில் வீசும் காற்றைவிட



இராக்காலங்களில் வீசும் காற்றே சுத்தமானது. 3. சர்க்கரை சம்பந்த மான ஆகாரங்களையும், மாவு சம்பந்தமான ஆகாரங்களையும் மிதமாக உட்கொள்ளல் வேண்டும். 4 நாம் சாப்பிடுமுன் கைகளை நன்றாகக் கழுவிய பிறகே உண்ணல் வேண்டும். 5. ஒவ்வொருதடவையும் சாப் பிட்டபிறகு பலதடவை வாய் கொப்பளித்தல் வேண்டும். 6. அடிக்கடி எச்சல் உமியும் வழக்கம் கெட்டது. 7. லாகிரிவஸ்துக்களை எப்பொ ழுதும் உபயோகித்தல் கூடாது. 8. பிறர் குடித்த பாத்திரத்தை நன் றாகக் கழுவாமல் ஒருபோதும் நீர்பருகல் கூடாது. 9. பழக்கமில்லாத நாய்களிடமாவது பூனைகளிடமாவது அணுகக்கூடாது. 10. விரல் களை ஒருபோதும் வாயில் வைத்தல் கூடாது. 11. இரவில் படுக்கும் போது ஜன்னல்களை நன்றாகத்திறந்துவைத்துப் படுத்தல் வேண்டும். 12. வெளியிற் செல்லும் காலத்தில் காலில் செருப்போ, அல்லது பூட்சோ போட்டுச்செல்லல் வேண்டும். 13. எப்பொழுதும் பல் துலக்குவதற்கு கருவேலங் குச்சியையாவது ஆலம் விழுதையாவது, அல்லது வேப்பம் குச்சியையாவது உபயோகித்தல் வேண்டும். 14. காலையிலும் மாலையிலும் குறைந்தது இரண்டு மைல்களாவது வெளி யிற் சென்று வரல் வேண்டும். 15. எப்பொழுதும் மிதமாகவே சாப் பிடல் வேண்டும். 17. காலம் தப்பி உண்பதினால் உடம்பில் நோய் ஏற்படும். 18. எப்பொழுதும் காலையில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தல் வேண்டும். 19. சாப்பிடும் போது அடிக்கடி பேசிக்கொண்டே சாப்பிடுதல் கூடாது. 20. ஜலம் சாப்பிடும் போது கவ்விக்கொண்டு குடித்தல்கூடாது

### குழந்தை வளர்த்தல்

"குழந்தை வளர்ப்பது கோவில் கட்டுவதுபோல்" என்பது ஆன் றோர் பழமொழி. 1. தற்காலம் வீதிகளில் விளையாடும் குழந்தைகள் தேகவலிமை இல்லாமலிருப்பதற்குக் காரணம் பெற்றோர்கள் கவனி ப்பின்மையே. ஆதலால் சிறுவயதிலேயே குழந்தைகட்கு நல்லவிளை யாட்டுகளைப்பயிற்றல் வேண்டும். 2. பெற்றோர்கள் நோயற்றசமயத் திலும் சாப்பிடும் பொழுது குழந்தைபேரில் இருக்கும் பேரன்பினால்

எச்சல் சாதத்தைக் கொடுக்கிறார்கள். இது குழந்தைக்கு மிகவும் கெடுதலை உண்டாக்குகிறது. 3. குழந்தைகள் எப்பொழுதும் குறும்புத்தன முடையவர்களாகவே யிருப்பார்கள். அதற்காக அக்குழந்தைகளை அடித்துவளர்த்தல் கூடாது. 4. குழந்தைகட்கு எப்பொழுதும் விளையாட்டிலும், புதியபொருள்களை பார்ப்பதிலும் கதைகள் கேட்பதிலும் பிரியம் அதிகம். ஆகையால் குழந்தைகள் குறும்பு செய்யும் பொழுது அடிக்காது அவர்கள் மனதை வேறுவழியில் திருப்புதல் வேண்டும். 5. குழந்தைகளை எப்பொழுதும் ஒருகையைப்பிடித்து தூக்குதல் கூடாது. 6. தொட்டிலில் பழக்கம் சுடுகாடுமட்டும் என்பது மூதோர்வாக்கு. ஆதலால் குழந்தைகட்கு நாம் எதைச் சொல்லிக்கொடுக்கிறோமோ அதைத்தான் சொல்லும். ஆகையால் குழந்தைகட்கு நல்ல வார்த்தைகளைச் சொல்லிக்கொடுத்தல் வேண்டும். உதாரணமாக இன்று மாமனைப்பார்த்து போடாமாமா என்று குழந்தையைச் சொல்லும்படி சொல்லிக்கொடுத்தால் நாளை தன்தகப்பனையே போடா அப்பா என்று சொல்லும். 7. கோபமென்பது மக்களுக்கு இயற்கையே. சிலசமயங்களில்பெற்றோர்கட்கு ஏதேனும் குடும்பசச்சரவேற்படில் குழந்தையானது தகப்பனோ அல்லது தயாரோ உடனே தங்கள்கோபத்தைக் காட்ட அறிகுறியாகக் குழந்தையை அடிக்கிறார்கள். இப்படிச்செய்வதினால் குழந்தைகள் பெற்றோரிடம் பயந்து கொள்கிறது. கோபம்வந்தால் குழந்தை என்னசெய்யும்? இதைபெற்றோர்கள் எண்ணுவதில்லைபோலும். 8. குழந்தைகளை அடிக்கடி மிரட்டுவதும் அடிப்பதும் கூடாது ஏனெனில் இராக்காலங்களில் குழந்தைகள் தூங்கும்பொழுது பழைய பயத்தை நினைத்து உளருகிறது. 9. குழந்தைகட்கு மனோசஞ்சலத்தைக் கொடுத்தால் குழந்தைகள் வளர்ச்சியையும் மனோவலிமையையும் தடைப்படுத்துகிறது. 10. குழந்தைகளை ஆறுவயது அடையும் வரையிலும் கிணற்றோரங்களிலும், தண்ணீர் நிறைந்தஇடத்திலும் விடக்கூடாது. 11. சிறுகுழந்தைகளை எப்பொழுதும் சமையல் செய்யும் இடங்களிலும், விளக்குப்பக்கத்திலும் விடக்



கூடாது. 12. குழந்தைகளிடம் நாம் எப்பொழுதும் அன்பாய் இருக்கவேண்டுமே யன்றி கோபத்தைக்காட்டி குழந்தையைப்பயப்படுத்தல் கூடாது 13. தங்களிடம்தான் அதிகநகை இருக்கிறதென்பதை அயலார் தெரியும்பொருட்டு குழந்தைகட்கு கிரய ஆபரணம் பூட்டிவெளியில்விடலாகாது. 14. இளமையில் குழந்தைகளை பயப்படுத்தல் கூடாது. ஏனெனில் வருங்காலத்தில் கோழைத்தன முடையவர்களாகவும், தைரியமற்றவர்களாகவும் இருப்பார்கள். 15. குழந்தைகள் மனத்தினைக்கவரும் நல்லவார்த்தைகளும், வீரவார்த்தைகளும் சொல்லல்வேண்டும். 15. குழந்தைகட்க்கு அடிக்கடி ஆகாரம் கொடுத்தல்கூடாது. அடிக்கடி விளையாட விடல்வேண்டும் 16. குழந்தைகளை வளர்ப்பதிலும், காப்பாற்றுவதிலும், தாய்மார்கள் அதிககவலை எடுத்துக் கொள்ளல்வேண்டும்.

## மாணவர்கள் கவனிக்கவேண்டியவைகள்

1. மாணவர்கள் விடியற்காலை நான்கு மணிக்கு எழுந்திருத்தல் வேண்டும். 2. எழுந்திருந்ததும் ஈஸ்வரனைப்பற்றியும், தான் பிறந்தநாட்டைப்பற்றியும் சிந்தித்தல் வேண்டும். பிறகே மற்றகாரியங்களை கவனித்தல் வேண்டும் 3. தினம் தினம் குறைந்தது காலையில் இரண்டுமணியும், மாலையில் இரண்டு மணியும் தேகப்பயிற்சி செய்தல் வேண்டும். 4. கலாசாலைகளில் படிக்கும் மாணவர்கள் ஜனசமூகத்திற்கு பலவிதங்களில் நன்மை செய்ய முயற்சித்தல் வேண்டும். 5. மாணவர்கள் தங்கள் தங்கள் ஊர்களில் பொது ஜனஊழியம் செய்வதற்கு சங்கங்களை ஏற்படுத்தல்வேண்டும். 6. இவ்விதம் சங்கங்களை ஏற்படுத்துவதினால் சங்கத்தின் மூல்யமாக அருமையானவிஷயங்களை மாணவர்கள் எழுதிப்படித்துத் தங்கள் அறிவைவிருத்தி செய்து கொள்ளலாம். 7 மாணவர்கள் ஏழைப்பிள்ளைகளுக்கும், தாய்தகப்பன்மார் இல்லாத பிள்ளைகட்கும் கல்வி கற்பிக்கலாம். 8. பள்ளிக்கூடவிடுமுறை நாட்களில் அவரவர்கள் தங்கள் தங்கள் ஊருக்குப்போகும்போது அங்கேஏழைப்பிள்ளைகளை ஒருங்குசேர்த்து அவர்கட்கு கல்விபோதித்தும், பொதுவிஷயங்களைப்

போதித்தும் வரலாம். 9 கொஞ்சம் செல்வமுள்ளவர்கள் ஏழைப் பிள்ளைகட்குப் புஸ்தகம் முதலியன வாங்கிக்கொடுத்தும் உதவலாம். 10. வைத்தியசம்பந்தமாய் கிராமவாசிகட்கு நல்லுதவி செய்யலாம், 11. ஜனசமூகஊழியத்தை முன்னிட்டு நம்நாட்டில் எற்பட்டிருக்கும் பொதுச்சங்கங்களிற் சேர்ந்து உதவிபுரியலாம். 12. மாணவர்கள் தங்கள் வீட்டிலும், தங்கள் பந்துக்கள் வீட்டிலும் உள்ள பெண்கட்கு கல்விகற்பிக்கலாம். எனெனில்குடும்ப அபிவிருத்திக்கு ஸ்திரீகள் கல்விகற்பது அவசியமாகும். 13. மற்றநாடுகளைக்காட்டிலும் நம்நாடு கீழானநிலையிலிருப்பதினால் மாணவர்கள் தங்கள் தாய்நாட்டிற்கு உழைக்க முற்படல்வேண்டும். உதாரணமாக ஜப்பானில் 100க்கு 95பேருக்குப்படிக்கத்தெரியும். நம்நாட்டில் 100க்கு 92 பேருக்கு எழுதப்படிக்கத்தெரியாது. ஆதலால் மாணவர்கள் இதை கவனித்து இவ்விஷயத்தில் அதிகஉழைப்பு எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

[மாணிக்கம்.]

## கடற்கரை சம்பாஷணை.

பாரதியும், நீலகண்டனும் ஒருநாள் மாலைப்பொழுதில் கடற்கரையோரத்தில் சம்பாஷணை செய்த விவரம்.

பாரதி :— கடவுள் இருப்பது உண்மைதானா?

நீலகண்டன் :— எண்ணையின்றி விளக்கெரியாததுபோல், கடவுளின்றி மக்களும் ஜீவிக்கமுடியாது.

பா :— பகவானை எங்ஙனம் காண்பது ?

நீ :— பொருள்வேண்டுமென்று ஆவலுற்றுத்திரியும் லோபியைப்போல் உன்மனம் ஈசனை அடைய ஆவல்கொள்ளல் வேண்டும்.

பா ;— கடவுளை, எப்பொழுதும் தியானிப்பதற்கு கடவுள் மனிதனிடத்தில் இருக்கிறது உண்மைதானா ?

நீ :— காந்தத்துக்கும் இரும்புக்கும் உள்ளசம்பந்தத்தைப்போல் கடவுளுக்கும் மனிதனுக்கும் சம்பந்தம் இருக்கிறது.

பா ;— அங்ஙனமாயின் கடவுள் என்மக்களைக்கவர்வதில்லை ?



நீ :— சேற்றில் அழுந்திகிடக்கும் இரும்பைக்காந்தம் இழுக்காதது போல், மாயையால் அழுந்திய ஆத்மா, பகவானுடைய கவர்ச்சியை யுண்கிறதில்லை.

பா :— அதெல்லாம் இருக்கட்டும். கடவுளைக்காண்பது சாத்தியமா ?

நீ :— பாலில் நெய்யைக்காண்பது சாத்தியமா?

பா :— சாத்தியந்தான்.

நீ :— எப்படிக்காண்பாய்?

பா :— பாலைத் தயிராக்கி, பிறகு தயிரைக்கடைந்து வெண்ணையாக்கி, உருக்கினால் நெய்யைக்காண முடியும்!

நீ :— அதேபோல பக்தியோகம் முதலிய சாதனங்களைக்கொண்டு கடவுளைக்காணலாம்.

பா :— பகவான் என்ற மந்திரத்திற்குப் பொருள் என்ன? மந்திரத்திற்கு சக்தி உண்டா?

நீ :— நீங்கள் ஆங்கிலக் கலாசாலையில் உயர்தரப் பட்டம் பெற்றவர். உங்களைப்பார்த்து நல்லவன் என்று சொன்னால் சந்தோஷமடைகிறீர்கள். கெட்டவன் என்று சொன்னால் என்னைப்பார்த்து கோபங் கொள்ள ஆரம்பிக்கிறதா? முதலில் சொன்ன வார்த்தை ஐந்து எழுத்துக்களாலாகிய ஒரு வார்த்தையே: இரண்டாவது சொன்னதும் ஐந்து எழுத்துக்களாகிய ஒரு வார்த்தையே. முதலில் சொன்னவார்த்தையைக்கேட்டு சந்தோஷமடைந்தீர். இரண்டாவது சொன்னவார்த்தையினால் வருத்தத்தை யடைந்தீர். சாதாரணவார்த்தைகட்கே இம்மாதிரி சக்திகள் இருந்தால், மந்திரம் என்ற வார்த்தைக்கும் கடவுள் என்ற சக்திக்கும் எவ்வளவு சக்தி உண்டென்பதை நான் எங்ஙனம் சொல்வது?

பா:— சொல்வதற்கு இயலாத சக்தியைக் கொண்ட பரம் பொருளைத் தரிசிக்க உரத்த குரலுடன் பகவந்நாமங்களை யுச்சரித்தால் தான் பகவானுக்குக் கேட்குமா?

நீ :— பகவந் நாமங்களை அவரவர் மனம் போனபடி உரத்த குரலிலோ, அல்லது மெல்லிய குரலிலோ உச்சரிக்கலாம்: எனெனில்

எறும்புகளின் காலடி சப்தத்தைக்கூட கேட்கும் பரம்பொருளுக்கு பகவந்நாமத்தை யெங்ஙனம் உச்சரித்தால் தான் என்ன? மனதை ஓரிடத்தில் நிருத்தி உண்மையான எண்ணத்துடன் பகவானைஸ் மரித்தல் வேண்டும்.

பா :— பரம்பொருளின் சக்தி அளவு கடந்ததென்பதைத் தெரிந்து அவரைத் தரிசிக்கமுயன்றும், காணுவிடில் என் செய்வது?

நீ :— முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார் என்ற பழமொழியை மறந்துவிட்டீர் போலும். விடா முயற்சியிருக்கின் ஈசனைக் காண்பது சுலபமேயன்றி கடினமல்ல. உதாரணமாக ஆழமுள்ள கடலில் முத்தைப் பெறவேண்டின் உயிரைக் கூட நினையாது பலதடவை களிலும் மூழ்கி கடைசியாக முத்தை அடைவது போல் இடைவிடாது பரம்பொருளை உண்மை மனதுடன் தியானிக்கின்பரம் பொருளைக் காண்பது திண்ணம்.

பா :—•உண்மையை உணர்ந்தேன். பலதடவைகளில் பகவானை நினைத் துநினைத்து சலித்துப்போயிருக்கிறேன். ஆனால் கடவுளை என் கண் ணினால் காணமுடியவில்லையே?

நீ :— கஞ்சா, அல்லது மது என்று சொன்னநிலையே மயக்க முண்டாகி விடுகிறதில்லை. மயக்கமுண்டாக வேண்டுமானால் கஞ் சாவை அறைத்து நீரில் கலக்கியும், மது குடித்தால் மயக்கம் உண் மையிலேயேவரும். அஃதேபோல் பக்தியோகத்தைக் கிரமமாய் அனுஷ்டிக்கும் பட்சத்தில் பகவானை என் காணமுடியாது?

பா :— நீங்கள் சொல்லுகிறபடி செய்யவேண்டுமென்றால் உலகில் எல்லாமக்களும் ஈசனைக்காணமுடியாதென எண்ணுகிறேன்.

நீ :– உலகில் உள்ளமக்கள் யாவரும் எப்பொழுதும் பசியுடன் இருப்பதில்லை. சிலர் காலையில் 7மணிக்கும் 8மணிக்கும் 9மணிக்கும் 10மணிக்கும் அல்லது ஏதோ ஒரு குறிப்பிட்ட நேரத்திலோ அல்ல து குறிப்பிடாத நேரத்திலோ உண்வு உட்கொள்வது உண்மையே. அதுபோல் இப்பிறவியில் ஈசனை நினைத்தால் பலபிறவிகள் கழித்தாயி னும் எல்லாரும் கடவுளைக் காண்பார்கள்.



:– என்மனதைத்தாங்கள் தெளிவுபடுத்தினீர்கள். என்வந்தனம் தங்கட்குரியதாகுக. கடைசியில் உங்களை ஒருகேள்விமட்டும் கேட்க ஆசைகொள்கிறேன். தற்காலம் உறங்கிக்கிடந்த மக்களைத்தட்டி எழுப்பின, விவேகானந்தரையும் மறந்து பலர்கடவுள் உண்டா என்றும், கடவுள் இருந்தால் காட்டுங்கள் என்றும், கடவுள்நிறம் என்ன வென்றும், கடவுளைப்பார்த்தவர்கள்யார் என்றும் பலவாறாகப் பிரசங்கங்கள் செய்கிறார்களே. அதன்காரணமென்ன?

நீ :– பள்ளிக்கூடத்திற் படிக்கும் இளைஞர்கட்கு தன்நாட்டைப் பற்றியும் தன்மதத்தைப்பற்றியும் போதனைசெய்வதில்லை. ஆதலாலே மாணவர்கள் மனதை எப்படியும் திருப்பலாம். ஆதலால் இளை ஞர்மனம் சரியான வழியில் இல்லை யென்றால் அவர்கள் பெற்றோர் களே காரணமன்றி அவர்கள் மக்கள்காரணமல்ல. இன்னும் சில மாதங்களில் தன்னைப்பெற்ற தாயாரையும் கூட தன்னைப் பெற்றார் களா இல்லையோ என்றசந்தேகம் வந்துவிடும். இதற்கெல்லாம்காரணம் கல்லூரிகளில் மதபோதனை யின்மையும் நம்மிடமுள்ள சில மூடப் பழக்கங்களுமேயாம்.

பா :— என்னதான் ஒருவன் புத்தி நாஸ்திகத்தில் சென்றாலும் தன் தாயை மறப்பானா?

நீ :— அப்படியல்ல. தான் பிறந்த நாட்டையும், தன் மதத்தையும் மறந்த இளைஞர்கள் தன் தாயை மறக்க எவ்வளவு நாட்கள் செல்லும்?

பா :— நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையாகத்தான் இருக்கிறது. முத்தி நெறி அடைவதற்கு ஒவ்வொருவனும் தன்தன் மதத்தை அனுசரிக்க வேண்டிய விஷயத்தைப் பற்றித்தங்கள் அபிப்பிராய மென்ன?

நீ :— தாங்கள் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்வதென்றால் நேரம் அதிகமாகிவிடும். ஆதலால் நாளை நாம் கடற் கரைக்கு வரும் பொழுது இதைப் பற்றி சம்பாஷிக்கலாம்.

பா :- சரி மணியும் இறவு 9ஆகிவிட்டது. வீடுபோய்ச்சேர்வோம்.

[அடுத்த நாள்நடந்த சம்பாஷணை அடுத்த இதழில் வரும்]

அம்பலவாணன்.

# உலகவிநோதம்.

இங்கிலாந்தை யடுத்த கார்க்பிரதேசத்தில் இருக்கும் மைக்கோல்மாக்கார்த்தி என்பவர் நித்திரைசெய்வதேயில்லை. "தூங்குவது வீண் என்றும் அஃது அவரவர் வழக்கத்தைப் பொருத்ததென்றும் சொல்லுகிறார். நித்திரையென்பது பழக்கமேயன்றிவேறல்ல. நான்கு மாதத்திற்கு ஐந்து அல்லது ஆறுமணிநேரம்தான் தூங்குவேன். எனக்கு எப்பொழுதும் கொட்டாவிவந்ததில்லை. சிரமம் ஏற்பட்டது கிடையாது தூங்குவதற்குப்போதுமான அவகாசம் மனிதவாழ்க்கைக்குக்கிடையாது. என்வாழ்நாட்களில் எனக்கு அதிகநோய்வந்ததும் கிடையாதென" அவர்கூறுகிறார். இவர்தூங்கும் நேரத்தை வேட்டையாடிக்கழிக்கிறார் .—

x x x x

உலகில்மொத்தம் 2500 பாஷைகள் இருக்கின்றன. இவைகளில் 618 பாஷைகளில் பைபிள்மொழிபெயர்பிக்கப்பட்டிருக்கிறது. சென்ற 25 ஆண்டுகளுக்குள் 250 பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது சராசரி ஐந்து வாரங்கட்கொருதரம் ஒருபாஷையில் மொழிபெயர்பிக்கப் படுகிறது. இதேமாதிரி மொழிபெயர்த்துக்கொண்டுவந்தால் உலகிலுள்ள எல்லாபாஷைகளிலும் மொழிபெயர்க்க இன்னும் 200 வருடங்கள் செல்லுமாம். ஆப்பிரிக்காவில் வழங்கும் 700 பாஷைகளின் பெயர் அறிந்து கொள்ளமுடிகிறது. இந்தியாவில் 150 பாஷைகள் பேசப்படுகின்றன. சென்ற ஆண்டில் 11,399,540 பைபில்பிரதிகள் விற்கப்பட்டனவாம்.

x x x x

ஆப்பிரிக்காவில் பரிடோரியாவுக்குப் பக்கத்திலுள்ள மொக்கவீஸ்பர்க் ஜில்லாவில் மலைப்பாங்கான இடங்களில் மாடுகள் மலைச்சாரலிலுள்ள மண்ணைத்தின்றே வேறு தீனியுமின்றி ஜீவிக்கின்றன. இதுவரையிலும் 10 ஆயிரம்டன் மண்ணைத்தின்று விட்டிருக்கிறதாம். 50 அடி அகலத்திற்கு ஒருபெரிய குகையாக மலையைக் குடைந்து விட்டனவாம். இம்மாடுகள் மற்றயமாடுகளைப்போல் வலிமையுள்ளனவாய் இருக்கிறதாம், விஞ்ஞானசாஸ்திரிகள் இம்மண்ணில் பெடோசியமும் ஒருவகையான உலோக உப்பும் கலந்திருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



x x x x

பால்கான் என்ற ஆகாயவிமானி 1909ம் ஆண்டில் 1950 அடிஉயரம் பறந்தார். சேவல் என்பார் 1910 ஆண்டில் 6481 அடிவுயரம் பறந்தார். அதேஆண்டில் லிகான்னியூ என்பார் 10075 அடிஉயரம் பறந்தார். 1911ம் ஆண்டில் சாரேஸ் என்பார் 12708 அடிஉயாம் பறந்தார். பால்கான் ரெப்பர் 1912ம் ஆண்டில் 18233 அடிஉயரம்பறந்தார். 1913ம் ஆண்டில், லிகான்யூ என்பவர் 19890 அடிகள் பறந்தார். 1914ம் வருடத்தில், லின்னிகோல் என் ர் 20638 அடிஉயரமும் ஒலீச்என்பார் 25545 அடிஉயரமும் பளமாப. கடல்மட்டத்திற்கு 45மைல் உயரம்பறந்துசென்றார்களாம்.

x x x x

இங்கிலாந்தில் ஒருவிநோதப்பள்ளிகூடமிருக்கிறது. பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் ஆண்மக்கள் சமையல் தொழில் கற்பிக்கப்படுகிறார்கள். பெண்கள் தச்சுவேலை கற்றுக்கொள்ளவேண்டும். ஆண்களுக்குப் பெண்வாத்தியார், பெண்களுக்கு ஆண்வாத்தியார். இந்தியாவிலேற்பட்டால் ?

x x x x

ஒருவன் பிறருக்கு யெவ்வளவு சிறிப்பை உண்டாக்கக் கூடும் என்பதை நிர்ணயிக்க, லோபோ கிராம் அல்லது நகைப்பைக் குறிக்கும் என்ற ஓர் புதியஇயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒருவனுக்கு நகைச்சுவை எம்மட்டில் இருக்கிறதென்பதை இந்த இயந்திரம் திட்டமாகக் காட்டும் இத்திறமையைக்காட்ட எண்ணங்கள் இருக்கும். நகைச்சுவைவல்லான் ஒருவன், ஜனங்களை நகைக்கச்செய்யாவிடில் அஃது அவனுடைய சாமார்த்தியக் குறைவையே

வாகவே இருந்தது. மதுபானம்செய்வது அநாசாரமாகவும்மதவிரோதமாகவும் கருதப்பட்டது. சமீபகாலத்திலேயே மேனாட்டுநாகரீகத்தினால் ஏற்பட்டபழக்கங்களுள் இதுவும்ஒன்றாக ஏற்பட்டது.

ஸ்ரீமதி அபலாபோஸ் :— கல்வியென்பது ஒருவிளையாட்டல்ல. கல்வியின்றி, வாழமுடியுமென்று நினைக்கக்கூடியதல்ல. வாழ்க்கைக்கு உணவும் நீரும்எப்படி இன்றியமையாதனவோ அப்படியே கல்வியும் இன்றியமையாதது.

பிஷப்பிரடெரிக்பீடர் ;— இந்தியர்களைப்போல் நிலத்தில் உழைக்கும் விவசாயிகள் உலகில் வேறெங்கும் இல்லை. இந்தியர்களைப் போல்பொறுமையுள்ள விவசாயிகள் வேறெவரும் இல்லை.

ஹென்றிபோர்ட் ,— வாழ்வில்வெற்றியடைந்த எவரும்தம் இளமையில் பணம்சம்பாதித்துச் சேர்த்துவைத்ததில்லை. தங்களை யபிவிருத்தி செய்து கொள்வதற்காக அவர்கள்தாம் சம்பாதித்த பணத்தை எல்லாம் செலவழித்தே விடுகிறார்.

லேடி ஆஸ்டர் :— பெற்றோர்களே குழந்தைகட்கு சமஉரிமை அளிக்காவிட்டால் அரசாங்கத்தார் அவ்வுரிமையை அளிப்பரென்று எப்படி எதிர்பார்க்கமுடியும்?

ரஸ்கின் :— உழைப்பினாலேயே எண்ணத்தைப் பரிசுத்தமாக்கலாம்; எண்ணத்தினாலேயே உழைப்பைப்பரிசுத்தமாக்கலாம் இவைகளை, வேறாகப்பிரிக்கமுடியாது.

பெல்ப்ஸ் :— நம்மால் முடிந்ததை நாம்செய்யுமாறு செய்விப்பவனே உண்மையானநண்பன்.

தனபதி அட்னி :— (சைமன்கமிஷன் விசாரணையின்போது) ஜனமரணத்தைப்பற்றிக் கொடுத்திருக்கும் கணக்கு விகிதத்தைப்பார்த்தால் சென்னையில் வசிப்பது பெரிய ஆபத்தாயிருக்கும் போலிருக்கிறது. (நகைப்பு).

லேடி அஸ்மான்ஜா ,— தீவிரமதப்பற்றினாலேயே சிறந்தகலைகளும் பெரியநாகரீகங்களும் உற்பத்தியாகும்.

சாந்திஅடிகள் —ஒருதேசதொண்டன் தன்திறமைக்கு நியாயமாக எவ்வளவு சம்பளம் கிடைக்குமோ அதைவிடக்குறைவான சம்பளத்திற்கே தேசத்தின் பொருட்டு உழைக்கவேண்டும்.

220498

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே எண் : 220498 ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.